
இலங்கை மத்திய வங்கி
தகவல் திணைக்களம்

# குறிப்பேடு

22 மலர் இதழ் 4-6 2003 ஏப்ரில்-ஜூன்




# இலங்கையின் பொருளாதாரம் 2002

இலங்கை மத்திய வங்கியின் சமூக, பொருளாதார மாதாந்த வெளியீடு

மத்திய வங்கியானது 1949 - ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் மூலமே உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை நாட்டின் பொருளாதாரத்தை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியால் ஆற்றப்பட்டுள்ள, ஆற்றப்படுகின்ற மற்றும் ஆற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் அளப்பரியன. 1977 இல் இலங்கையின் பொருளாதாரம் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கியின் கடமைப் பொறுப்புகள் பெருமளவு விரிவடைந்தன. சந்தைச் சக்திகளின் மீது செயற்படுத்தப்படுகின்ற பொருளாதாரத்துக்கு ஏற்ற விதத்தில் நிதியியல் துறையும் விரிவடைந்தது. இதைத் தொடர்ந்து இலங்கை மத்திய வங்கியானது தனது அடிப்படைக் குறிக்கோள்களைக்கூட அமைத்துக் கொண்டது. விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டையும், நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டையும் பேணி வரும் பொருட்டு 2003 ஆம் ஆண்டில் தனது ஆராய்ச்சிகளை ஆரம்பித்தது. இவ்வாராய்ச்சிகளின் பெறுபேறுகள் எவ்விதமானவை என்பதை 2002 ஆம் ஆண்டின் மத்திய வங்கி ஆண்டறிக்கையில் விளக்கமாகக் காணக்கூடியதாயுள்ளது. அது மிகவும் விரிவான விளக்கத்தினைக் கொண்டதொரு தொகுதியாகும்.

இக் குறிப்பேடு இதழின் மூலம், இந்த 2002 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது, கல்வி பெறுவோர்களினதும், ஆய்வாளர்களினதும் வசதியின் பொருட்டு சுருக்கமாகவும் விமர்சன ரீதியிலும் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதனை **2002 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை** மீள வாசித்தலெனவும் குறிப்பிடலாம்.

**குறிப்பேடு** ISSN 1391 - 7676

2003, ஏப்ரில் – ஜூன்

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00
வருடாந்த சந்தா : ரூபா 240.00
(தபாற் கட்டணத்துடன்)

தகவல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனப் பெயரிடப்பட்ட காசுக் கட்டளைகள்/காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுவதன் மூலம் குறிப்பேடு சஞ்சிகையை மாதாந்தம் தபாலில் பெற்றுக் கொள்ளலாம்.

பணிப்பாளர்
தகவல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
த.பெ. 590
கொழும்பு.

கட்டுரைகள்

இலங்கையின் பொருளாதாரம் 2002

அட்டைப்படம் : ஸ்ரீ தர்ஷன நாரன்பனாவ

"குறிப்பேடு" சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள், கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்

T. 47.2

நெல்லியடி பலநோக்குக் கூ. ட்டுறவே நாட் டுயர்வு ... பொது நூலகம்

# இலங்கையின் பொருளாதாரம் 2002

வின்சன் மர்வின் பர்னாந்து
பிரதிப் பணிப்பாளர்
வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையம்

2002 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுகின்ற இக் கட்டுரையானது ஆறு பிரிவுகளை உள்ளடக்கியதாயுள்ளது.

1. இலங்கையின் பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியும்.
2. இலங்கையின் அரச பொருளாதாரம்.
3. இலங்கையின் வங்கித் தொழில், பண நிரம்பல் மற்றும் விலைகள்.
4. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம்.
5. இலங்கையின் சென்மதி நிலுவையும் வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கருவும்.
6. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் பிரதானமான பொருளாதாரக் கொள்கை வழிமுறைகளும்.

### 1. இலங்கையின் பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடுகளும் பொருளாதார வளர்ச்சியும்

2001 ஆம் ஆண்டில் 1.5% ஆல் சுருங்கிய பொருளாதாரம், 2002 ஆம் ஆண்டில் 4% வளர்ச்சியை அடைந்திருப்பது உற்சாகமூட்டக்கூடியதொரு ஆரம்பமாகும். இந்த 4% வளர்ச்சிக்கு ஏதுவாயிருந்த பல காரணிகள் உள்ளன.

- சமாதானச் செயற்பாடானது தொடர்ந்து நடைபெற்றமை.
- அரச நிதியியல் நிலைமை சாதகமாயமைந்தமை.
- நிதியியல் கொள்கையின் வினைத்திறன்.
- உள்ளக அமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களுக்கான தனது அர்ப்பணிப்பு
- சாதகமான சர்வதேச சூழ்நிலை
- வேளாண்மை மற்றும் சேவைத் துறைகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி
- பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் காரணமாக ஒன்று திரண்ட கேள்வி அதிகரித்தமை
- சாதகமான காலநிலை

2002 ஆம் ஆண்டில் 4% பொருளாதார வளர்ச்சியின் காரணமாக பொருளாதாரத்தினுள் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் உருவாகின. அதாவது, வருடம் பூராவும் பணவீக்கம் வீழ்ச்சியடைந்தமை, அரச நிதியியல் துறைகளின் பிரதானமான கணக்குகளில் அதாவது, நடைமுறைக் கணக்கின் நிலுவை, ஆரம்ப நிலுவை மற்றும் மொத்த வரவு-செலவுப் பற்றாக்குறை குறைவடைந்தமை, சென்மதி நிலுவை சாதகமாயிருந்தமை, வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரித்தமை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சமநிலையொன்று உருவாகியமை, வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டமை, உள்ளமைப்பு ரீதியிலான பல சீர்திருத்தங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டமை ஆகியன இவற்றில் முக்கியத்துவம் வகிக்கின்றன.

### 2002 இல் திறந்த பொருளாதாரத்துக்கு 25 வருடங்கள் பூர்த்தியடைதல்

1977 இன் இறுதிப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலாக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியடைந்தமையினால் 2002 ஆம் ஆண்டு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது. 25 வருடங்களாக சந்தையில் செயற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் ஒருசில வெற்றிகள் அடையப்பெற்ற போதிலும் முழுமையான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்த பல துறைகள் எஞ்சியுள்ளன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- கவர்ச்சியைப் பெறாத கீழ் மட்டத்திலுள்ள பொருளாதார வளர்ச்சி
- போதியளவு முதலீடுகளும் சேமிப்பு வீதமும் இல்லாமை
- தொடர்ந்து நிலவுகின்ற பேரண்டப் பொருளாதார சமமின்மை
- உற்பத்தித் திறன் குறைவடைந்துள்ளமை
- வினைத் திறனற்ற முறையில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் மற்றும் வளங்களின் குறை பயன்பாடு
- பரந்தளவில் வியாபித்துள்ள வறுமை
- குறைந்த தலைக்குரிய வருமானம்
- கூடுதலான உள்ளமைப்பு ரீதியிலான தொழிலின்மை
- கூடுதலான பண வீக்கம்
- அதிகரித்துச் செல்லும் அரச படுகடன்கள்
- செலாவணி வீதத்தின் பெறுமதி குறைவடைதல்.

இந் நிலைமைகளை 25 வருடங்களாக அனுபவிப்பதற்குக் காரணமாயமைந்த முக்கியமான மூன்று விடயங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. முதலாவது, அதிக செலவைக் கொண்டதும் அழிவை ஏற்படுத்தக்கூடியதுமான யுத்தம் 20 வருடங்களுக்கு மேல் நடைபெற்று வந்தமையும், இரண்டாவது, சாதகமற்ற பேரண்டப் பொருளாதார சூழலும், மூன்றாவது, பொருளாதார தாராளமயப்படுத்தலினதும் ஏனைய உள்ளமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களினதும் மந்த கதியிலான முன்னேற்றமும் இவைகளில் அடங்குகின்றன.

### யுத்தத்தின் செலவினமும் சமாதானத்தின் நன்மைகளும்

1983 இல் இருந்து தொடர்ந்து வரும் இனப் பிரச்சினை மற்றும் வட-கிழக்கு யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட செலவினம் மிகப் பாரியதாகும். அவற்றில் பின்வருவன முக்கியமானவைகளாகும்.

- வினைத் திறனற்ற முறையில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படல்
- உற்பத்தித் திறன் வீழ்ச்சியடைதல்
- அடித்தள வசதிகள் அழிவுற்றமை
- உற்பத்தி ஆற்றல் குறை பயன்பாட்டிற்கு உள்ளாதல்
- முதலீட்டு நம்பிக்கை வீழ்ச்சியுற்றமை
- அரசியல் நிலைப்பாடின்மை
- மனித சமூகம் பாதிப்புக்குள்ளாதல்
- பொருளாதாரத்தின் மிருதுவான செயற்பாடுகளுக்கு தடை ஏற்படல்
- பாதுகாப்புச் செலவு அதிகரித்தமையினால் அரச நிதியியற் பற்றாக்குறை தீவிரமடைந்தமை
- உயிர்கள் பல அழிவுற்றமை

2002 பெப்ருவரி 22 ஆம் திகதி அரசாங்கமும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதோடு, அதன் கீழ் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு யுத்தமற்ற சமாதான சூழலொன்று நாட்டினுள் உருவாக்கப்பட்டு நாட்டிற்குப் பல நன்மைகள் கிடைக்கப்பெற்றன. அதாவது, சமாதானத்தின் பொருளாதார நன்மைகள் பலவற்றை இன்று நாம் அனுபவிக்கின்றோம். அவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் காட்டலாம்.

- பண்டங்கள் சந்தையிலும், உழைப்புச் சந்தையிலும், மூலதனச் சந்தையிலும் புது மலர்ச்சியொன்று உருவாகியமை.
- உற்பத்தித் திறன் அதிகரித்தமை
- முதலீட்டு நம்பிக்கை உறுதியடைந்தமையும் முதலீடுகள் அதிகரித்தமையும்
- சந்தைச் செயற்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டமை
- பேரண்டப் பொருளாதார நிலை வளர்ச்சி அடைந்தமை
- பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பலவற்றை அமுலாக்க முடியுமானமை
- காரணி அசைவுகளின் அதிகரிப்பு



4937 4937
6461

- மனித அழிவுகள் நிறுத்தப்பட்டமையும் குடும்ப இடம் பெயர்வுகள் தவிர்க்கப்பட்டு சமூக அழிவுகள் குறைக்கப்பட்டமையும்
- கமத்தொழில் துறை, கடற்றொழில் துறை, களப் பயிர்ச் செய்கை, போக்கு வரத்து, வர்த்தகம், சுற்றுலாத் துறை, தொலைத் தொடர்பு போன்ற அனைத்துத் துறைகளும் வளர்ச்சியடைந்தமை
- பாதுகாப்புச் செலவு 2001 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 4.9% வீதமாயிருந்ததோடு, 2002 இல் இது 4% வீதத்துக்குக் குறைவடைந்தமை. பொதுவாகப் பார்க்கின்றபோது 2002 இல் ரூபா 100 பில்லியனாக துரித வேகத்தில் நடைபெற்ற பாதுகாப்புச் செலவானது ரூபா 60 பில்லியனுக்கு வரையறுக்–கப்பட்டமை. இதன் மூலம் வரவு–செலவுப் பற்றாக்குறையை 2% ஆல் குறைப்பதற்கு முடியுமாயிற்று.
- வெளிநாட்டுத் துறை சாதகமாயிருந்தமை. (யுத்தத் தளபாடங்கள் குறைவடைந்தமையும் வெளிநாட்டு உதவிகள் அதிகரித்தமையும், வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தமையும்.)

### பொருளாதார வளர்ச்சி

**பொருளாதார வளர்ச்சி** என்பது, ஒரு நாட்டின் உற்பத்தி ஆற்றலின் தொடர்ச்சியான அதிகரிப்பாகும். இது காரணிச் சேவைகளின் அதிகரிப்பு, காரணி உற்பத்தித் திறனின் அதிகரிப்பு ஆகிய விடயங்களின் மூலம் நடைபெறுகின்ற நீண்டகாலச் செயற்பாடாகும். பொருளாதார வளர்ச்சியானது, பெரும்பாலும் தேசிய உற்பத்திப் புள்ளி விபரங்களைத் தழுவியதாகவே சமர்ப்பிக்கப்படுகின்றது. ஏதேனுமொரு காலகட்டத்தினுள் பொருளாதாரச் செயலாற்றுகையை மதிப்பிடுகின்றபோது, மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே பிரதானமான அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு விலை மாற்றங்கள் நீக்கப்பட்ட அதாவது, பண வீக்கத் தாக்கங்களுக்கு சீர்செய்யப்பட்ட உண்மை மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியின் வளர்ச்சியே கவனத்திற் கொள்ளப்படுகிறது. உண்மை உள்நாட்டு, தேசிய உற்பத்தியானது, நடைமுறைக் காரணிச் செலவின் விலைக்கு ஏற்பக் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு, தேசிய உற்பத்தியை ஏற்புடைய விலைச் சுட்டெண்கள் மற்றும் ஏற்புடைய உற்பத்திச் சுட்டெண்களிலிருந்து மதிப்பிறக்கம் செய்வதன் மூலமே கணிக்கப்படுகின்றது. (கவனிக்க: குறிப்பிட்ட விலைச் சுட்டெண்ணால் பகுப்பதன் மூலம் அல்ல). இங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி (GNP)ஆகிய இரண்டு எண்ணக்கருக்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை இனங்காணுதல் முக்கியமானதாகும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி** என்பது, ஏதேனுமொரு குறிப்பிட்ட நாட்டின் எல்லையினுள் அல்லது புவியியல் பிரதேசத்தினுள் (உதாரணமாக– இலங்கையில் இது ஆண்டுதோறும் அதேபோன்று மூன்று மாதத்திற்கு ஒரு தடவையும் கணிக்கப்படுகிறது) உருவாகும் உற்பத்திகளின் பெறுமதியாகும். (வெளியீட்டு முறையின் கீழ் இலங்கையில் உற்பத்திகளின் பெறுமதிக்காக சேர்மானப் பெறுமதியே பயன்படுத்தப்படுகிறது.)

**மொத்தத் தேசிய உற்பத்தி** என்பது, ஏதேனுமொரு குறிப்பிட்ட காலகட்டத்தினுள், நாட்டில் வதிபவர்களுக்குச் சொந்தமாயுள்ள வளங்களிலிருந்து உருவாகின்ற மொத்த உற்பத்திகளின் பெறுமதியாகும். இதன் பிரகாரம் மொத்தத் தேசிய உற்பத்தியானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு தேறிய காரணி வருமானங்கள் கூட்டப்படுவதன் மூலமே கணிக்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டின் இலங்கையின் மொத்த உற்பத்திகளின் பெறுமதியை பல்வேறு விலைகளின் கீழ் காட்டக்கூடியதாயுள்ளது. (புள்ளிவிபரக் குறிப்பு 1).

*1வது புள்ளிவிபரக் குறிப்பு*

**பல்வேறு விலைகளின் கீழ் 2002 ஆம் ஆண்டின் தேசிய உற்பத்தி**

| தேசிய உற்பத்தி | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| • சந்தை விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 1,560 |
| • நடைமுறைக் காரணிச் செலவின விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 1,378 |
| • நிலையான (1986) காரணிச் செலவின விலைக்கு ஏற்ப மொத்தத் தேசிய உற்பத்தி | 863 |

இங்கு சந்தை விலை (Market Price) என்பது, உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர் உண்மையிலேயே செலுத்துகின்ற விலையாகும். நடைமுறைச் சந்தை விலையிலிருந்து நடைமுறைக் காரணிச் செலவின விலையைப் பெறுவதற்கு மறைமுக வரிகளைக் கழித்து, நிவாரணங்கள் கூட்டப்படுதல் வேண்டும். நடைமுறைக் காரணிச் செலவின் கீழ் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பில் இரண்டு விடயங்கள் தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஒன்று, உற்பத்தி அளவின் அதிகரிப்பாகும். மற்றையது, விலைகளின் அதிகரிப்பாகும். இவ் விலைகளின் அதிகரிப்பை நீக்குவதற்கு நடைமுறைக் காரணிச் செலவின விலையைக் குறிப்பிட்ட விலைச் சுட்டெண்களிலிருந்து மதிப்பிறக்கம் செய்தல் வேண்டும். மேலும் சில துறைகள் தொடர்பாக ஏற்புடைய உற்பத்திச் சுட்டெண்களும் பயன்படுத்தப்படுகின்றன. அப்போது ஏதேனுமொரு அடிப்படை ஆண்டின் விலையின் (1996 = 100) கீழ், அதாவது, நிலையான காரணி விலையின் கீழ் மொத்தத் தேசிய உற்பத்தியின் (உண்மைத் தேசிய உற்பத்தி) பெறுமதி பெறப்படுகின்றது. ஒரு நாட்டில் ஏதேனுமொரு ஆண்டினுள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை (Rate of Economic Growth) அளவிடுவதற்கு இந்த உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் மாற்றமுறும் நூற்று வீதமே பயன்–படுத்தப்படுகிறது. இதற்காக உண்மை மொத்தத் தேசிய உற்பத்தியின் மாற்றமும் கவனத்திற் கொள்ளப்படலாம்.

1977 இல் ஆரம்பிக்கப்பட்ட ஏற்றுமதியை முன்னிட்டான சந்தைப் பொருளாதாரத்தினுள் இலங்கையின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வேகம் 2வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

*2 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் (1977 - 2002)**

(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி)

| ஆண்டு | வளர்ச்சி வேகம | ஆண்டு | வளர்ச்சி வேகம |
|---|---|---|---|
| 1977 | 4.2 | 1990 | 6.2 |
| 1978 | 8.2 | 1991 | 4.6 |
| 1979 | 6.3 | 1992 | 4.3 |
| 1980 | 5.8 | 1993 | 6.9 |
| 1981 | 5.8 | 1994 | 5.6 |
| 1982 | 5.1 | 1995 | 5.5 |
| 1983 | 5.0 | 1996 | 3.8 |
| 1984 | 5.1 | 1997 | 6.3 |
| 1985 | 5.0 | 1998 | 4.7 |
| 1986 | 4.3 | 1999 | 4.3 |
| 1987 | 1.5 | 2000 | 6.0 |
| 1988 | 2.7 | 2001 | -1.5 |
| 1989 | 3.3 | 2002 | 4.0 |

1977 தொடக்கம் 1986 வரையிலான திறந்த பொருளாதாரத்தின் பின்னரான முதல தசாப்தத்தினுள் இலங்கையின் சராசரி வருடாந்தப் பொருளாதார வளர்ச்சி வேகம் 5.5% வீதமாயிருந்ததோடு 1987-1996 வரையிலான இரண்டாவது தசாப்தத்தினுள் இவ் வேகமானது 4.5% வரை வீழ்ச்சி அடைந்தது. 1997 - 2002 காலகட்டத்தினுள் மேலும் இவ் வேகமானது 4% வீதமாயிருந்தது.

### இலங்கைப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள்

1990 - 2002 வரையிலான காலகட்டத்தினுள் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள் புள்ளிவிபரக் குறிப்பு 3 இன் கீழ் காட்டப்பட்டுள்ளன.

3 வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் 1990 – 2000 காலகட்டத்தினுள் துரிதமாக வளர்ச்சியடைந்த துறைகளாக **கைத்தொழில** மற்றும் **பணிகள** துறைகளை அடையாளங் காணக்கூடியதாயுள்ளது. கைத்தொழில் துறை 6.8% வீதத்தாலும் பணிகள் துறை 5.6% வீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இவ்விரு துறைகளும் 2001 ஆம் ஆண்டில் எதிர்க்கணிய நிலையை அறிக்கையிட்டன. 2002 ஆம் ஆண்டில் பணிகள் துறை 6% வீத அதி உயர் வளர்ச்சியைக் காட்டியதோடு, இது மொத்தப் பொருளாதார வளர்ச்சியிலும் 80% வீதப் பங்களிப்பை வழங்கியது. 2002 இல் 1% அளவில் குறைந்த வளர்ச்சியைக் காட்டிய கைத்தொழில் துறையானது மொத்தப் பொருளாதார வளர்ச்சியில் 7% பங்களிப்பை வழங்கியது. விவசாயத் துறையானது 1990–2000 ஆம் காலகட்டத்தினுள் 2.4% சராசரி வருடாந்த வளர்ச்சியைக் காட்டியதோடு 2001 இல் 4.3% எதிர்க்கணிய வளர்ச்சியைக் காட்டியது. 2002 இல் மீண்டும் 1.9% நேர்க்கணிய வளர்ச்சியை அறிக்கை–யிட்டது.

*3 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளதும் வளர்ச்சியடையாதுள்ளதுமான துறைகள் (வருடாந்த நூற்று வீத வேகம்)**

| தலைப்பு | 1990-2000 | 2001 | 2002 |
|---|---|---|---|
| **(அ) வேளாண்மைத் துறை** | **2.4** | **-4.3** | **1.9** |
| - தேயிலை | 4.4 | -3.5 | 5.0 |
| - இறப்பர் | -1.5 | -1.5 | 5.0 |
| - தெங்கு | 2.1 | 13.5 | 13.0 |
| - நெல் | 3.7 | -5.7 | 6.1 |
| - மீன்பிடித் தொழில் | 4.0 | -3.9 | 5.9 |
| **(ஆ) கைத்தொழில் துறை** | **6.8** | **-2.1** | **1.0** |
| - சுரங்கம் அகழ்தல் | 2.8 | 0.7 | -1.1 |
| - தயாரிப்புகள் | 8.1 | -4.2 | 2.2 |
| - கட்டடவாக்கம் | 5.2 | 2.5 | -0.8 |
| **(இ) பணிகள் துறை** | **5.6** | **-0.5** | **6.0** |
| - போக்குவரத்து/தொடர்பூட்டல் | 6.4 | 3.8 | 7.7 |
| - மொத்த, சில்லறை வியாபாரம் | 5.5 | -6.7 | 5.5 |

மூலம் : மத்திய வங்கி ஆண்டறிக்கை

தனியொரு விடயமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றபோது 1990 இல் இருந்து இற்றைவரை உயர் வளர்ச்சியைக் காட்டிய விடயமாக தயாரிப்புத் தொழில், போக்கு வரத்து மற்றும் தொடர்பூட்டல், மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், கட்டடவாக்கம், தேயிலை உற்பத்தி, நெல் உற்பத்தி மற்றும் மீன்பிடித் தொழில் என்பன உள்ளன. கடும் வீழ்ச்சிக்கு உள்ளான விடயமாக இறப்பர் உற்பத்தி உள்ளது.

## இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு

இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பைப் பிரதானமாக மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம்.

1. வேளாண்மைத் துறை
2. கைத்தொழில் துறை
3. பணிகள் துறை

மத்திய வங்கியின் ஆண்டறிக்கையானது, உற்பத்திக் கட்டமைப்புக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைகளைப் பிரித்துக் காட்டுகின்றபோது, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கைத்தொழில் வகைப்படுத்தலின் மூன்றாவது திருத்தத்துக்கு இணங்கியொழுகின்றவாறு, உலக வங்கியின் வெளியீடொன்றான World Economic Indicators க்காகத் தயாரிக்கப்பட்ட வகைப்படுத்தலை 2001 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தியுள்ளது. இவ் வகைப்படுத்தலின் படி வேளாண்மைத் துறையில் விவசாயம், காடு வளர்ப்பு மற்றும் மீன்பிடித் துறைகளும், கைத்தொழில் துறையில் சுரங்கம் அகழ்தல், தயாரிப்புகள், மின்சாரம், எரிவாயு (கேஸ்), நீர், உடனலப் பாதுகாப்புச் சேவைமற்றும் கட்டடவாக்கத் துறைகளும், பணிகள் துறையில் ஏனைய அனைத்து உப துறைகளும் உள்ளடங்குகின்றன. இதன் பிரகாரம் 2002 ஆம் ஆண்டின் இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு தயாரிப்பு முறைகளுக்கு ஏற்ப 4வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் சுருக்கிக் காட்டப்பட்டுள்ளது. 1998 - 2002 காலத்துக்கான இதன் விரிவான வகைப்படுத்தலானது 5வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

*4 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் உற்பத்திக் கட்டமைப்பு 2002**

| சேர் பெறுமதி | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக |
|---|---|
| வேளாண்மை | 20.1 |
| கைத்தொழில் | 26.3 |
| பணிகள் | 53.6 |
| மொத்தம் | 100.0 |

இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்டமைப்பானது கடும் மாற்றத்துக்குள்ளாகி வருகின்றது. அதாவது, 1948 இல் இலங்கை சுதந்திரமடைகின்றபோது வேளாண்மைத் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நூற்றுவீதமாக நோக்கப்படுகின்றபோது 35% ஆக இருந்தது. இது இன்று 20% வரை கடும் வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. மறுபுறம் 1948 இல் 21% ஆக இருந்த கைத்தொழில் துறை இன்று 26% வரையிலும், பணிகள் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 44% இல் இருந்து 54% வரையிலும் அதிகரித்துள்ளது. இது ஒரு நாட்டின் வருமான மட்டம் அதிகரிப்பதைத் தொடர்ந்து நடைபெறுகின்ற கேள்வி முறையின் மாற்றத்துக்கு ஏற்ப நடைபெறுவதாகும். அதாவது, மக்களுடைய வருமானம் பரவலாக அதிகரிப்பதைத் தொடர்ந்து உணவுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வானது 1 க்குக் குறைந்த பெறுமானத்தை எடுப்பதோடு கைத்தொழிற் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான வருமானக் கேள்வி நெகிழ்வானது 1 க்கு மேற்பட்ட பெறுமானத்தை எடுக்கின்றது. இது ஒரு நாடு அபிவிருத்தியடைவதைக் காட்டும் பண்பொன்றாகுமென்பது அபிவிருத்திப் பொருளியலாளர்களது கருத்தாகும். கடந்த தசாப்தத்தினுள் (1991–2002) பொருளாதாரக் கட்டமைப்பின் மாற்றத்தினை 1வது வரைபடம் காட்டுகின்றது.

இங்கு இலங்கையின் வேளாண்மைத் துறையின் ஒப்பீட்டு முக்கியத்துவம் குறைவடைந்துள்ள போதிலும் பெரும்பாலான துறைகளில் அதன் தனிமுதல் முக்கியத்துவம் அதிகரித்துள்ளதென்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக, சுதந்திரமடைகின்றபோது இலங்கையின் தேயிலை உற்பத்தி 136 மில்லியன் கிலோவாயிருந்ததோடு 2002 ஆம் ஆண்டில் 310 மில்லியன் கிலோவாயுள்ளது. இக் காலகட்டத்தினுள் தெங்கு உற்பத்தி 2392 மில்லியன் தேங்காய்களிலிருந்து 2796 மில்லியன் தேங்காய்கள் வரை அதிகரித்துள்ளது. நெல் உற்பத்தியானது 350 மில்லியன் மெற்றிக் தொன்னிலிருந்து 2,860 மில்லியன் மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது. இறப்பர் உற்பத்தி மாத்திரம் 96 மில்லியன் கிலோவிலிருந்து 91 மில்லியன் கிலோ வரை குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் இலங்கையின் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளின் துரிதமான வளர்ச்சியின் காரணமாக கமத்தொழில் உற்பத்திகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் சுதந்திரத்தின் பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து 2002 ஆம் ஆண்டாகின்றபோது, தேயிலை 1.4%

*5வது புள்ளிவிபரக் குறிப்பு*

**நடைமுறைக் காரணிச் செலவுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கம் (சதவீதத்தில்)**


| துறை | 1998 | 1999 | 2000 | 2001 (அ) | 2002 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. விவசாயம், காட்டுத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழில்** | **21.1** | **20.7** | **19.9** | **20.1** | **20.1** |
| **2. கைத்தொழில்** | **27.5** | **27.3** | **27.3** | **26.8** | **26.3** |
| 2.1 சுரங்கம் மற்றும் அகழ்தல் பணிகள் | 1.9 | 1.8 | 1.9 | 1.9 | 1.8 |
| 2.2 தயாரிப்புத் தொழில் | 16.5 | 16.4 | 16.8 | 16.0 | 15.9 |
| 2.3 மின்வலு, வாயு, நீர் | 7.6 | 7.6 | 7.3 | 7.6 | 7.2 |
| 2.4 கட்டடவாக்கம் | 1.5 | 1.5 | 1.2 | 1.3 | 1.4 |
| **3. பணிகள்** | **51.4** | **52.0** | **52.8** | **53.1** | **53.6** |
| 3.1 போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 11.1 | 11.4 | 11.7 | 12.1 | 12.4 |
| 3.2 மொத்த, சில்லரை வர்த்தகம் | 21.5 | 21.2 | 22.6 | 21.1 | 20.5 |
| 3.3 வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 7.6 | 8.1 | 7.6 | 8.5 | 9.2 |
| 3.4 வதிவிடங்களின் உடைமை | 1.9 | 1.8 | 1.8 | 1.8 | 1.7 |
| 3.5 பொது நிருவாகமும் பாதுகாப்பும் | 5.3 | 5.3 | 5.2 | 5.6 | 5.8 |
| 3.6 பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை | 4.0 | 4.1 | 4.0 | 4.1 | 4.0 |
| **4. மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| **5. வெளிநாட்டுத் தேறிய காரணி வருவாய்கள்** | **-1.3** | **-1.8** | **-2.1** | **-1.9** | **-1.7** |
| **6. மொத்த தேசிய உற்பத்தி** | **98.7** | **98.2** | **97.9** | **98.1** | **98.3** |

(அ) திருத்தியமைக்கப்பட்டது .
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*1வது வரை படக் குறிப்பு*

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளமைப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆகவும் இறப்பர் 0.4% ஆகவும் தெங்கு 1.3% ஆகவும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 3.5% ஆகவும் இருந்ததோடு நெல் உற்பத்தி 3.2% ஆகவும் துணைப் பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகள் 3.2% ஆகவும், மீன்பிடித் தொழில் 2.7% ஆகவும், வெட்டு மரம் 1.9% ஆகவும் மிகக் குறைந்ததொரு முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. மறுபுறம், கைத்தொழில் துறையில் தயாரிப்புத் தொழில்களின் ஒப்பீட்டு முக்கியத்துவம் படிப்படியாக அதிகரித்து 2002 ஆம் ஆண்டில் 16.7%ஐக் காட்டுகின்றது. 2002 ஆம் ஆண்டில் கட்டடவாக்கத் துறை 6.9% ஆகவும், சுரங்கம் அகழ்தல் 1.7% ஆகவும், மின்சாரம், எரிவாயு, நீர் மற்றும் உடனலச் சேவைகள் 1.4% ஆகவும் ஒப்பீட்டு முக்கியத்துவத்தினை அறிக்கையிட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய துறையான **பணிகள் துறை** 54% எண்ணிக்கை ரீதியிலான முக்கியத்துவத்தை 2002 ஆம் ஆண்டில் காட்டியுள்ளதோடு, இதில் மிகப் பெரும் பணியாக மொத்த, சில்லறை வியாபாரம் மாறியுள்ளதோடு 21% ஐயும் அறிக்கையிட்டுள்ளது. இரண்டாவது முக்கிய பணிகள் துறையான போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் 12.8% வீதமாக உள்ளதோடு. மூன்றாவது முக்கிய பணிகள் துறையான வங்கிச் சேவை, காப்புறுதி, அசையாச் சொத்துக்கள் ஆகியன 8.9% ஐக் காட்டுகின்றன. இதர பணிகள், அதாவது பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு 5% ஆகவும், வீட்டு உரிமை 1.8% ஆகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

### இலங்கைப் பொருளாதாரத்தின் திரண்ட கேள்வியும் மொத்த வளங்களும்

உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டின் மூலம் உருவாகின்ற மொத்தக் கேள்வி (திரண்ட கேள்வி) என்பது, அரச மற்றும் தனியார் துறைகள் ஆகிய இரண்டு துறைகளினதும் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவுகளின் மொத்தத் தொகையின் மூலம் காட்டப்படுகின்ற **மொத்த உள்நாட்டுச் செலவாகும்.** 2002 ஆம் ஆண்டின் இலங்கையின் திரண்ட கேள்வியின் (Aggregate Demand) உள்ளடக்கமானது 6வது புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் உள்நாட்டுக் கேள்வியும் வெளிவாரிக் கேள்வியும்

*6வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கைப் பொருளாதாரத்தின் திரண்ட உள்நாட்டுக் கேள்வி**

| தலைப்பு | பெறுமதி (ரூபா பில்லியன்) |
|---|---|
| 1. தனியார் நுகர்வு | 1,214 |
| 2. அரச நுகர்வு | 139 |
| 3. மொத்த நுகர்வு (1+2) | 1,353 |
| 4. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 338 |
| 5. கையிருப்பு மாற்றங்கள் | - |
| 6. மொத்த முதலீடு (4+5) | 338 |
| 7. மொத்த உள்நாட்டுச் செலவு (3+6) | 1,691 |

உள்ளடங்குவதோடு, மொத்த உள்நாட்டுக் கேள்வியில் மொத்த நுகர்வும் மொத்த முதலீடும் உள்ளடங்குகின்றது. வெளிவாரிக் கேள்வியில் பண்டங்கள் மற்றும் காரணிகளாயில்லாத பணிகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு • இடையிலான வித்தியாசம் (தேறிய ஏற்றுமதி) உள்ளடங்குகின்றது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85% நுகர்வாயுள்ளதோடு எஞ்சிய 15% வீதம் முதலீடுகளும் தேறிய ஏற்றுமதிகளுமாயுள்ளன. மொத்த நுகர்வுச் செலவில் 90% தனியார் நுகர்வாயுள்ளதோடு எஞ்சிய 10% அரச நுகர்வுச் செலவாயுள்ளது.

## 2. இலங்கையின் அரச பொருளாதாரம் (Public Economy)

இதன் கீழ் முக்கியமாக 2002 ஆம் ஆண்டில் இலங்கையின் அரச நிதியியல் கொள்கையின் நோக்கங்கள், அண்மைக்கால அரச நிதியியல் துறையின் செயற்பாடுகள், அரச வருமானம், அரச செலவுகள் மற்றும் ஒட்டுமொத்தமான அரச வரவு-செலவுத் திட்ட நிலைமையினது போக்குகள், அரச படுகடன் நிலை, அரச நிதியியல் முகாமைத்துவப் பொறுப்புக்கள் சட்டம், மற்றும் புதிய நலன்புரி நன்மைகள் சட்டம் ஆகியன தொடர்பாகவே ஆராயப்படுகின்றது.

### 2002 அரச நிதியியல் கொள்கையின் நடைமுறைகள்

அரச நிதியியல் கொள்கை (Fiscal Policy) என்பது, பேரண்டப் பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஒரு அரசாங்கமானது தனது வரிகள், செலவுகள் மற்றும் கடன் கொள்கைகளை உரிய விதத்தில் நெறிப்படுத்துதலாகும். பிரதானமான பேரண்டப் பொருளாதார நோக்கமொன்றான பேரண்டப் பொருளாதார நிலைப்பாட்டை, குறிப்பாக விலை மட்டத்தை நிலையானதாக வைத்திருக்கும் நோக்கத்தை முன்னிட்டு 2002 ஆம் ஆண்டின் வரவு-செலவுக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டதாயினும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவதற்கு முடியாமலிருந்தது. ஆயினும் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்றபோது சிறப்பானதொரு முன்னேற்றத்தை அறிக்கையிட்டது.

**முதலாவதாக,** 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் முறையே 9.9% மற்றும் 10.8% வீதமாயிருந்த ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையை 2002 ஆம் ஆண்டில் 8.9% வீதமாகக் குறைக்க முடியுமாயிருந்தது.

**இரண்டாவதாக,** அரச வருமானத்தை விஞ்சிய அரச நடைமுறைச் செலவுகளின் காரணமாக அரச நடைமுறைக் கணக்கின் நிலுவை எனப்படும் அரச சேமிப்பின்மையை 2001 ஆம் ஆண்டின் 4.9% வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது 4.4% வீதம் வரை 0.5 வீதத்தால் குறைக்க முடியுமாயிருந்தது.

**மூன்றாவதாக,** நடைமுறைச் செலவுகளை, 2001 ஆம் ஆண்டின் 21.6% வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது 20.8% வீதம் வரை குறைக்க முடியுமாயிருந்தது.

**நான்காவதாக,** வட்டி செலுத்துகைகளை நீக்கிவிட்டு கணிப்பிடப்படுகின்ற முதனிலைக் கணக்கின் நிலுவையானது, 2001 ஆம் ஆண்டின் 4.1% வீதத்துடன் ஒப்பிடப்படுகின்றபோது 1.6% வீதம் வரை குறிப்பிடத்தக்க விதத்தில் குறைவடைந்தது.

**ஐந்தாவதாக,** மொத்த வரவு-செலவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வங்கி முறையிலிருந்து (மத்திய வங்கி + வர்த்தக வங்கிகள்) பெறப்பட்ட கடன்களை 2001 ஆம் ஆண்டின் 3.5% வீத நேர் கணிய நிலையிலிருந்து 2002 ஆம் ஆண்டில் -0.3% வீதம் வரையிலான மட்டத்திற்குக் கொண்டுவர முடியுமாயிற்று. அதாவது 2002 ஆம் ஆண்டில் வங்கித் துறையின் மீதான அரச பொறுப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியுமாயிற்று. இதன் மூலம் பண வீக்க அழுத்தமும் குறைவடைந்தது.

### அரசிறை (Government Revenue)

அரசிறையில வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம் ஆகிய இரு வகைகளும் உள்ளடங்குகின்றன. 2002 ஆம் ஆண்டின் அரசிறையின் உள்ளடக்கமானது 7வது புள்ளிவிபரக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

*7 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**அரசிறையின் உள்ளடக்கம்**

| வருமானம் | நூற்று வீதம் |
|---|---|
| வருமான வரி | 14.4% |
| GST/VAT | 36.7% |
| உற்பத்தி வரி | 19.9% |
| இறக்குமதி வரி | 10.8% |
| ஏனைய வரிகள் | 3.0% |
| வரியல்லா வருமானம் | 15.2% |
| மொத்தம் | 100.0% |

*8வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் வரி உள்ளடக்கம்**

| வரி | மொ.உ. உற்பத்தி % |
|---|---|
| 1. வருமான வரி | 2.4% |
| 2. முத்திரை வரி | 0.2% |
| 3. பற்று வரி | 0.1% |
| 4. பண்டங்கள சேவைகள வரி (GST/VAT) | 4.2% |
| 5. உற்பத்தி வரி | 3.3% |
| 6. சர்வதேச வர்த்தக வரி | 2.0% |
| 7. தேசிய பாதுகாப்பு வரி | 1.8% |
| மொத்தம் (1-7) | 14.0% |

2002ஆம் ஆண்டின் மொத்த அரசிறையினுள் மொத்த வரி வருமானம் 85% வீதமாகும். இது முன்னைய ஆண்டில் 88% வீதமாயிருந்தது. 2002 ஆம் ஆண்டில் வரி வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14% வீதமாயிருந்ததோடு அது முன்னைய ஆண்டின் 14.6% வீதத்துடன் ஒப்பிடப்படுகின்றபோது குறைவடைதலாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடப்படுகின்றபோது 14% வீத வரி வருமானமானது பின்வரும் விதத்தில் கிடைக்கப்பெற்றது.


முன்னைய ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 14.6% வீதமாயிருந்த வரி வருமானமானது 2002 ஆம் ஆண்டில் 1.4% வீதம் வரை குறைவடை-வதற்குப் பல காரணிகள் ஏதுவாயிருந்தன.

- 2001 ஒக்ரோபர்/பெப்ருவரியில் வழங்கப்பட்ட அரச நிதியியல் சலுகைகள்
- 2002 வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட வரிச் சலுகைகள்
- பொருளாதாரம் இயல்பு நிலையை அடைவதில் ஏற்பட்ட தாமதம்
- பாரிய வரித் திருத்தங்களுடன் வரி மன்னிப்புகள் வழங்கப்பட்டமை

உதாரணமாக, தனது வருமானத்தை அல்லது சொத்துக்களை 2002 மார்ச் 31 இல் வெளிப்படுத்தாது (பின்னர் இக் காலகட்டம் நீடிக்கப்பட்டது) உள்ள நபர்களுக்காக 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வரி மன்னிப்பு வழங்கப்பட்டமையானது 2002 ஆம் ஆண்டின் வரிச் சேகரிப்பில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

*2வது வரைபடக் குறிப்பு*

**எவ்வாறு ரூபா உழைக்கப்பட்டது**




- தனிநபர் வருமான வரி விடுவிப்பு எல்லையை 2002 ஏப்ரில் 1 ஆம் திகதியிலிருந்து ஆண்டுக்கு ரூபா 144,000 இல் இருந்து ரூபா 240,000 வரை அதிகரித்தமை. (2004 வரவு-செலவுத் திட்டத்தில் இது ரூபா 300,000 ஆகும்)
- முத்திரை வரி 2002 ஏப்ரில் மாதத்திலிருந்து நீக்கப்பட்டமை. (இதற்குப் பதிலாக பற்று வரியும் விமான நிலைய அபிவிருத்தி வரியும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட போதிலும் பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டமையின் காரணத்தினால் இதன் மூலமான மொத்த வருமானமானது முத்திரை வரி வருமானத்தை விடக் குறைவாயிருந்தது.)
- தேசிய பாதுகாப்பு வரிப் பங்களிப்பானது 2001 ஒக்ரோபரில் இருந்து நீக்கப்பட்டமை
- இரண்டு வரிகளை ஒன்றிணைத்துப் புதிதாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட சேர் பெறுமதி வரி (VAT) யின் மூலம் கிடைத்த வரி வருமானம் குறைவடைந்தமை.

### சேர் பெறுமதி வரி (VAT)

சேர் பெறுமதி வரி என்பது பண்டங்கள் மற்றும் சேவைகளின் நுகர்வின் மீது அறவிடப்படும் ஒரு வரியாகும். இது அப்போதிருந்த பண்டங்கள், சேவைகள் வரியுடன் (GST) தேசிய பாதுகாப்பு அறவீட்டு வரியை (NDL) ஒன்றிணைத்து அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதொரு வரியாகும். சேர் பெறுமதி வரி எனப்படும் வெற் (VAT) இன் கீழ், பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியின் மற்றும் விநியோகத்தின் அனைத்துக் கட்டங்களிலும் அதனோடு சேர்க்கப்படுகின்ற பெறுமதியின் மீதே வரி அறவிடப்படுகின்றது. வரியின் இறுதிச் சுமையை நுகர்வோரே தாங்குகின்றனர்.

வெற் வரியில் இரண்டு முக்கியத்துவங்கள் உள்ளன. முதலாவது, திரிபு நிலை குறைவாயுள்ளமையாகும். (இடைத் தரகர்களூடாக நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களில் வரி அறவிடப்படாது இறுதி நுகர்வின்போது வரி அறவிடப்படுவதனாலாகும்). இரண்டாவது, வரி மீது வரி அறவிடப்படுகின்ற பிரச்சினை (Cascading effect) இதன் மூலம் நீங்குகின்றமையினாலாகும்.

வெற் வரியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற வரி வருமானம் கிடைக்காமைக்கான முக்கியமான காரணம், வெற் வரியின் விளைவு வீதம் குறைந்த மட்டத்தில் இருப்பதனாலாகும். வெற் வரியின் விளைவு வீதம் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\frac{\text{சேர் பெறுமதி வரி வருமானம் உள்நாட்டு வரியின் வீதமாக}}{\text{சேர் பெறுமதி வரி வீதம்}} \times 100$$

இது இலங்கையில் 26% ஆகும். பிலிப்பைன், சிங்கப்பூர், வியற்னாம், மொரீசியஸ் ஆகிய நாடுகளில் 30% - 40% வீதத்துக்கு இடையிலாகும். பெருந்-தொகையான பண்டங்கள் வெற் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளமையே இக் குறைவுக்குக் காரணமாகும்.

### சேர் பெறுமதியின் பண்புகள்


- நுகர்வின் மீது அறவிடப்படும் ஒரு வரியாக இருத்தல்
- அனைத்து இறக்குமதிகளிலிருந்தும் வரி அறவிடப்படுதல்
- அனைத்து ஏற்றுமதிகளும் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருத்தல்
- வரி அறவிடப்படும் வருமானமானது காலாண்டுக்கு ரூபா 5 இலட்சம் அல்லது வருடத்துக்கு 18 இலட்சத்துக்கு அதிகமான-தாயிருத்தல்
- இரண்டு வரி வீதங்களைக் கொண்டிருத்தல். அத்தியாவசியப் பண்டங்களுக்கு 10% வீதமும் ஏனைய பண்டங்களுக்கு 20% வீதமும் ஆகும். (ஏற்றுமதிக்கு 0% ஆகும். ஒரு சில இறக்குமதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.) (2004 வரவு-செலவுத் திட்டத்தின்படி VAT வரி வீதமானது 15% வீத தனியொரு வீதமாகும்.

### 2002 இல் இலங்கையின் அரசிறையின் சிறப்புப் பண்புகள்

- அரசிறையில் 85% வீதம் வரி வருமான-மாயிருத்தல்
- தேசிய வருமானத்தில் 14% வீதம் வரி வருமான-மாயிருத்தல்
- அரசிறையில் வரியல்லா வருமானம் 15% வீதமாயிருத்தல் (அதாவது மத்திய வங்கியின் இலாபத்தின் மாற்றல்கள், வட்டி வருமானம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்)
- தேசிய வருமானத்தில் வரியல்லாத வருமானம் 25% வீதமாயிருத்தல்
- அரசிறையில் ஏறத்தாழ 3/4 பங்கு மறைமுக வரியாயிருத்தல் (மறைமுக வரியென்பது பண்டங்கள், சேவைகளின் மீது விதிக்கப்-படுகின்றதும் இடம் பெயர்க்கக்கூடியதுமான, உற்பத்தியாளரால் அல்லது வழங்குனரால் சேகரிக்கப்பட்டு அரசாங்கத்துக்குச் செலுத்தப்-படுகின்ற வரியாகும். உதாரணமாக, சேர் பெறுமதி வரி, உற்பத்தி வரி, இறக்குமதி வரி)
- கூடுதலான வரி வருமானம் பண்டங்கள், சேவைகள் வரி (GST) மற்றும் சேர் பெறுமதி வரி (VAT) களின் மூலம் கிடைக்கப்-பெற்றுள்ளமை. (2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆகஸ்ட் வரை GST வரியும் 2002 ஆகஸ்ட் 01 ஆம் திகதியிலிருந்து VAT வரியும் அமுலாக்கப்பட்டது.) (இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.2% வீதமாயிருந்த-

*3வது வரைபடக் குறிப்பு*

**எவ்வாறு ரூபா செலவிடப்பட்டது**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*9வது புள்ளிவிபரக் குறிப்பு*

**அரச செலவுகளின் உள்ளடக்கம்**

| செலவு | நூற்று வீதம் (மொத்த செலவில்) |
|---|---|
| 1. நடைமுறைச் செலவுகள் | 82.0 |
| * அரச சம்பளங்களும் படிகளும் | (13.1) |
| * யுத்தச் செலவுகள், பொதுச் சட்டமும் பாதுகாப்பும் | (16.1) |
| * வட்டி செலுத்துகைகள் | (29.0) |
| * குடும்பங்களுக்கான ஒப்படைப்புகள் | (13.4) |
| * ஏனைய நடைமுறைச் செலவுகள் | (10.4) |
| 2. மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல்கள் | 18.0 |
| மொத்தம் | 100.0 |

மையும் மொத்த அரசிறையில் 1/3ஆக இருந்தமையும்)

- வரி வருமானத்தைப் பொறுத்தவரை இரண்டாவது இடத்தை உற்பத்தி வரி (மதுபானம், சிகரட், பெற்றோலியம், போன்றவையின் மீது) மற்றும் மூன்றாவது இடத்தை இற்குமதி வரி கொண்டுள்ளது. (தற்போது வெளிநாட்டு வாத்தகத்தின் மீது விதிக்கப்படுகின்ற வரியாக, இறக்குமதி வரி + துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி மாத்திரமே கருதப்படுகின்றது. ஏற்றுமதி வரி தற்போது அமுலில் இல்லை).

**அரச செலவுகள**

பொருளாதார வகைப்படுத்தலின் படி, அரச செலவுகள் பிரதானமாக, நடைமுறைச் செலவுகள், மூலதனச் செலவுகள் மற்றும் தேறிய கடன் வழங்கல்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. (ஏனைய வகைப்படுத்தலானது, பணிகளுக்கு ஏற்ப அதாவது, சாதாரண பொதுப் பணிகள், சமூக சேவைகள் மற்றும் பொருளாதாரப் பணிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.)

2002ஆம் ஆண்டின் பொருளாதார வகைப்படுத்தலின்படி அரச செலவுகள் பகிர்ந்து செல்கின்ற விதத்தினை 9வது புள்ளிவிபரக் குறிப்பு காட்டுகின்றது.

மொத்த அரச செலவுகளில் ஏறத்தாழ 82% வீதம் நடைமுறைச் செலவுகளாகும். இதன்படி நடைமுறைச் செலவுகள் தொடர்பாக சிறப்பானதொரு பகுப்பாய்வைச் செய்தல் முக்கியமானதாயிருக்கும்.

## 2.4 நடைமுறைச் செலவுகள்

அரச பணிகளைப் பேணிவரும் பொருட்டு ஏற்கப்படுகின்ற அனைத்துச் செலவுகளும் நடைமுறைச் செலவுகளாகும். இந் நடைமுறைச் செலவுகளில், பண்டங்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்கபபடும் செலவுகள் (மத்திய அரசாங்கத்தின் சிவில் துறை + பாதுகாப்புத் துறை), வட்டி செலுத்துகைகள், ஓய்வூதியம் உட்பட ஏனைய நடைமுறை மாற்றல்கள் உள்ளடங்குகின்றன. **நடைமுறை மாற்றல்கள** என்பது அரச பணிகளைப் பேணிவரும் பொருட்டு ஏற்கப்படும் செலவுகளில் உள்ளடங்கியிருக்கின்ற ஒருதலைப்பட்சச் செலவுகளாகும். இதன்படி நடைமுறைச் செலவுகளில் பரிமாற்ற வடிவத்தில் நடைபெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் போன்றே ஒருதலைப்பட்சமான கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்குவதைக் காண்கிறோம். தேசிய கணக்கீட்டின்போது இந் நடைமுறைச் செலவுகளை அரச நுகர்வின் கீழ் உள்ளடக்குகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைச் செலவுகளின் பண்டங்கள், சேவைகளுக்கான செலவுகள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுகின்றன. அதாவது, உற்பத்தியொன்று உருவாவதற்குக் காரணமாயமைகின்ற செலவு வகைகள் மட்டுமேயாகும். வருமான மீள் பரவலை உருவாக்குகின்ற மாற்றல் செலவுகள் தவிர்க்கப்படுகின்றன. மொத்த அரச செலவுகளில் 82% வீதமும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20.8% வீதமுமான இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளடக்கமானது 10வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழும் 4வது வரைபடக் குறிப்பின் கீழும் காட்டப்பட்டுள்ளது.

*10வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் நடைமுறைச் செலவுகளின் உள்ளடக்கம் 2002**

| துறை | நடைமுறைச் செலவில் % |
|---|---|
| 1. மத்திய அரசாங்கத்தின் சிவில் துறை | 13 |
| 2. பாதுகாப்புச் செலவுகள் | 20 |
| 3. கடன்களுக்கான வட்டி | 36 |
| 4. துணை அரச நிறுவனங்களில் செய்யப்பட்ட மாற்றல்களும் ஏனைய மாற்றல்களும் | 9 |
| 5. குடும்பங்களுக்கான மாற்றல்கள் | 16 |
| 5.1 ஓய்வூதியம் | (9%) |
| 5.2 சமுர்த்திக் கொடுப்பனவு | (3%) |
| 5.3 உர மானியம் | (1%) |
| 5.4 ஏனைய குடும்ப ஒப்படைப்புகள் | (3%) |
| 6. ஏனைய ஒப்படைப்புகள் | 6% |
| மொத்தம் | 100 |


10வது புள்ளிவிபரக் குறிப்பின்படி இலங்கையின் அரச வரவு-செலவுத் திட்டத்தில் நடைமுறைச் செலவின் முக்கியமான பண்புகள் சிலவற்றை அடையாளங்காணலாம். **முதலாவது**, நடைமுறைச் செலவில் 36% வீதம் அரச கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்கே செலவிடப்படுகின்றது. 1999 - 2000 காலகட்டத்தினுள் இது 28%-36% வீதமாயிருந்தது. இது அரசாங்கம் வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு பெருமளவில் கடன் பெறுவதன் விளைவாகும். இதன் காரணமாக வருடாந்தம் அரச படுகடன் பணிகளை (கடன் தவணைப் பணம் + வட்டி) செலுத்துவதற்காக அரசாங்கத்தால் பெருமளவு வளங்களை ஒதுக்க-வேண்டி நேர்ந்துள்ளது.

**இரண்டாவதாக**, நடைமுறைச் செலவுகளில் 20% வீதமானவை பாதுகாப்புக்காகச் செலவழிக்-கப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செலவு ரூபா 63 பில்லியனாயிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% வீதத்துக்கு அண்மியதொரு தொகையாகும். வளங்கள் வரையறுக்கப்பட்டதாயுள்ள இலங்கையைப் போன்ற-தொரு நாடு யுத்தத்துக்காகச் செய்கின்ற செலவு பாரிய அளவு அதிகரிப்பதில் தறுவாய்ச் செலவினம் அதிகமாயிருக்கும். அதாவது கல்வி, சுகாதாரம் போன்ற நலன்புரித் துறைகளில் ஈடுபடுத்துவதற்குள்ள வளங்கள் இதன் மூலம் குறைவடைவதனாலாகும். அதே போன்று பொருளாதார வளர்ச்சி வேகம் குறைவடைதல், தொழில் வாய்ப்புகள் குறை-வடைதல், பணவீக்கத் தாக்கம் அதிகரித்தல், சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் தீவிரமடைதல், மக்களது வாழ்க்கை நிலை சிக்கலுக்குள்ளாதல், உயிர்கள் அழிவுக்குள்ளாதல், சொத்துக்கள் அழிவுறுதல் ஆகியன யுத்தத்தின் ஏனைய பொருளாதார மற்றும் சமூக விளைவுகளாகும். 2002 முதல் இற்றைவரை யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக 2003 ஆம் ஆண்டுக்கு உத்தேசிக்கப்பட்டதாயிருந்த ரூபா 100 பில்லியன் பாதுகாப்புச் செலவை ரூபா 60 பில்லியனுக்கு வரையறுக்கக்கூடியதாயிருந்தது.

**மூன்றாவதாக**, குடும்பங்களுக்கான மாற்றல்கள் 16% வீதமும் துணை அரச நிறுவனங்களுக்கான மாற்றல்களும் ஏனைய மாற்றல்களுமாக 9% வீதமும் சேர்ந்து மொத்த மாற்றல் செலவுகள் 25% வீதம் ஆகும். இலங்கையின் மாற்றல்களாக, (நடைமுறை ஒப்படைப்புகள்) அதன் பெறுமதிகளுக்கு ஏற்ப முறையே ஓய்வூதியம், சமுர்த்திக் கொடுப்பனவுகள், அரச தொழில் முயற்சிகளுக்கான மாற்றல்கள் மற்றும் உர மானியம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஏனைய

*4வது வரைபடக் குறிப்பு*

**நடைமுறைச் செலவுகளின் உள்ளமைப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

மாற்றல்களின் கீழ் இலவச பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலைச் சீருடைகள், பருவகாலப் பயணச் சீட்டுகள், ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்கான கொடுப்பனவுகள், அகதிகளுக்கான உலர் உணவு முத்திரைகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### அரச முதலீடுகள் (Public Investment)

அரச முதலீடுகள என, மூலதனச் செலவுகளும், மீளச் செலுத்தப்பட்டதன் பின்னரான கடன் வழங்கல்களுமே (தேறிய கடன் வழங்கல்கள்) கருதப்படுகின்றன. **மூலதனச் செலவுகள** என்பது, உண்மைச் சொத்துக்களை அடையப் பெறுவதற்காகச் செய்யப்படுகின்ற செலவுகளினதும், மூலதன மாற்றல்கள் எனப்படும் மூலதன ஒப்படைப்புக்களினதும் கூட்டுத்தொகையாகும். **தேறிய கடன் வழங்கல** என்பது, கடன் வழங்கலுக்கும் கடன் மீளப் பெறப்படலுக்கும் இடையிலான வித்தியாசமாகும். இதன் கீழ் முற்பணக் கணக்குகளின் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீள் கட்டமைத்தல் செலவுகளும் உள்ளடங்குகின்றன. துரித கதியிலான பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தல் அரச முதலீட்டுச் செலவுகளின் நோக்கமாகும்.

2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.9% வீதமாயிருந்த அரச முதலீடுகள் 2002 ஆம் ஆண்டில் 4.6% வீதமாயிருந்தது.

### 2002ஆம் ஆண்டில் அரச செலவுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள்

- ஒழுங்குமுறையான செலவுக் கட்டுப்பாட்டு முறைகள் பிரயோகிக்கப்பட்டமை
- வீணான செலவுகள் நிறுத்தப்பட்டமை
- முன்னுரிமை வழங்கப்படாத செலவுகள் நிறுத்தப்பட்டமை
- சமாதானச் செயற்பாடுகளின் காரணமாகப் பாதுகாப்புச் செலவுகள் குறைவடைந்தமை
- நலன்புரிச் செலவுகள் பொருத்தமான இலக்குகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டமை (இதற்கென புதிய நலன்புரி நன்மைகள் சட்டமொன்று 2002 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சட்டத்தின் நோக்கம் யாதெனில், நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளைச் செலுத்துவதற்குத் தேவைப்படுகின்ற செயற்பாடுகளுக்கான சட்ட ரீதியானதும் கருத்தியல் ரீதியிலானதுமான வரையறைகளைத் தயாரிப்பதாகும்.
- அரச நிறுவனங்களுக்கும் ஏனைய அரச மட்டத்திலான நிறுவனங்களுக்கும் செய்யப்பட்ட ஒப்படைப்புகள் தீவிர கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை.
- நடைமுறைச் செலவுகளில் 35% வீதத்தை வட்டியாகச் செலுத்துவதற்கு நேர்ந்தமையும் இது நடைமுறைச் செலவினுள் தனிப்பெரும் செலவாக இருந்தமையும்.
- பொதுசனப் பாதுகாப்பு மற்றும் சட்டம் தொடர்பான செலவுகள் தவிர்ந்த 2002 ஆம் ஆண்டின் பாதுகாப்புச் செலவுகள் ரூபா 49 பில்லியன் வரையிலான குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டமை.
- சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக மிகவும் பயனுள்ள முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெற்ற குடும்ப எண்ணிக்கை 16 இலட்சத்திலிருந்து 14 இலட்சம் வரை இலட்சத்தால் குறைவடைந்தமை.
- இறக்குமதி விலைக்கு ஏற்ப உள்நாட்டில் உர விலையைத் தீர்மானிப்பதற்கு வசதி செய்யப்பட்டமை.
- சமூகத்தில் மிகவும் தேவைப்பாடுடைய குழுவினருக்கு மாத்திரம் பாடசாலைச் சீருடையை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டமை.
- ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தில் அரசுக்குச் சொந்தமான பங்குகளில் 12% வீதத்தையும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அரசுக்குச் சொந்தமான பங்குகளில் 39% வீதத்தையும் தனியார்மயப்படுத்தியமை.
- பெற்றோலியத் துறையை இலகுபடுத்தியமையும் தன்னியக்க முறையில் விலையைத் தீர்மானிக்கின்ற சமன்பாடொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் அத்துறையின் வர்த்தக நிலைமை மேம்படுத்தப்பட்டமையும்.
- 2002ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க நீர் மின்சார மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலம் மின்சார சபையின் தனியுரிமை நிலையிலிருந்து ஒரு சில துறைகள் நீக்கப்பட்டமை.
- பெருந்துக் கட்டணங்களைத் தீர்மானிக்கும் பொருட்டு விலைச் சமன்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட்டமை.
- சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்டமொன்று (VRS) ஒரு சில அரச நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்டமை.

### பணிகளின்படி அரச செலவுகளை வகைப்படுத்தல்

பணிகளின்படி அரச செலவுகளை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்

1. சாதாரண பொதுப் பணிச் செலவுகள்
2. பொருளாதாரப் பணிச் செலவுகள்
3. அரச படுகடன்களுக்கான வட்டி செலுத்துகைகள்
4. சமூக சேவைச் செலவுகள் (சுகாதாரம், கல்வி, நலன்புரி, வீடமைப்பு மற்றும் சனசமூக சேவைகள்)

2002ஆம் ஆண்டில் பணிகளின்படி இலங்கையின் அரச செலவுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதத்தினை 5வது வரைபடக் குறிப்பு காட்டுகின்றது.

### ஒட்டுமொத்தமான அரச வரவு-செலவு நிலைமை

2002 இன் ஒட்டுமொத்தமான அரச வரவு-செலவுப் பற்றாக்குறை மொ.உ.உ.யின் 8.9% வீதமாயிருந்தது. இது 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் நிலவிய மொ.உ.உ.யின் முறையே 10.8% மற்றும் 9.9% ஆகிய ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையுடன் ஒப்பிடப்படுகின்றபோது குறைந்ததொரு மட்டமாகும். ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையென்பது, அரச வருமானத்தை விஞ்சிய அரச செலவுகளின் நிலையாகும். இந்த ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறையும் அது நிதியிடப்பட்ட விதமும் 1வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் தரப்பட்டுள்ளது.

நல்லியடி பலநோ... கூட்டுறவே நாட்டுயர்வு ... சங்கம்

1வது புள்ளிவிபரக் குறிப்பு

**வரவு-செலவுப் பற்றாக்குறையும் பற்றாக்குறை நிதியிடப்பட்ட விதமும் - 2002**

(ரூபா பில்லியன்)

| | | |
|---|---|---|
| 1. மொத்த வருமானம் (வரி + வரியல்லாத) | | 261 |
| 2. நடைமுறைச் செலவுகள் | | 330 |
| 3. நடைமுறைக் கணக்கின் நிலுவை (1-2) | | 69 |
| 4. மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | | 72 |
| 5. ஒட்டுமொத்தமான வரவு-செலவுப் பற்றாக்குறை | | 141 |
| 6. பற்றாக்குறையை நிதியிடல் | | |
| 6.1 வெளிநாட்டு நிதி | 9 | |
| 6.2 உள்நாட்டு நிதி - வங்கியல்லாத | 132 | |
| 6.3 உள்நாட்டு நிதி - வங்கிகள் | -5 | |
| 6.4 தனியார்மயப்படுத்தல் பெறுகைகள | +5 | 141 |

2002 ஆம் ஆண்டில் வரவு-செலவுப் பற்றாக்குறை நிதியிடப்படுகின்றபோது ஒரு சில சாதகமான நிலைமைகளைக் காணக்கூடியதாயிருந்தது.

(i) வரவு-செலவுப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு முடியுமாயிருந்ததன காரணமாக 2002இல் கடனில் தங்கியிருத்தலானது, 2001ஆம் ஆண்டின் 36% வீதத்திலிருந்து 2002ஆம் ஆண்டில் 32% வீதம் வரை குறைவடைந்தமை.

(ii) உள்நாட்டுக் கடன் வட்டியின் மீதான அழுத்தம் குறைவடைந்தமை. (வட்டி வீதம் குறைவடைந்ததன் காரணமாக)

(iii) கடன் கருவியில் செலவைத் தாங்கி நிற்கக்கூடிய நிலைமையைக் காணக்கூடியதாயிருந்தமை.


(iv) வங்கித் துறைகளுக்கான படுகடன்கள் மீளச் செலுத்தப்பட்டமை.

### அரச படுகடன்கள்

- 2002இன் இறுதியாகின்றபோது நிவர்த்தி செய்யப்படாத அரச படுகடன் தொகை ரூபா 1669 பில்லியனாயிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக நோக்குகின்றபோது இது 105.3% வீதமாகும். அரச படுகடனினுள் நிவர்த்தி செய்யப்படாத உள்நாட்டுக் கடன்தொகை ரூபா 948 பில்லியனாயிருந்ததோடு, (மொ.உ.உ.யின் 60%) மொத்த வெளிநாட்டுக் கடன்தொகை ரூபா 721 பில்லியனாகும். (மொ.உ.உ.யின் 40%)
- 2002இல் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (கடன் தவணைப் பணம் + வட்டி) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 17.9% வீதமாயிருந்தது. சுதந்திரமடைந்ததன் பின்னர் முதற் தடவையாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுத் தொகையானது (ரூபா 284 பில்லியன்) அரச மொத்த வருமானத்தை (ரூபா 261 பில்லியன்) விஞ்சியுள்ளது. இதன்படி கடன் பணிக் கொடுப்பனவுகள் மொத்த அரச வருமானத்தில் 104.6% வீதமாயிருந்தது. இது மொத்த அரச செலவுகளில் 50.8% வீதமாகும்.

*5வது வரைபடக் குறிப்பு*

**தொழிற்பாட்டின்படி செலவினம் - 2002**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அரச நிதியியல் பொறுப்புக்கள் முகாமைத்துவச் சட்டம்**

2002ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட இச் சட்டமானது 2003 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வருகின்றது. இதன் பிரதானமான நோக்கம் யாதெனில், அரச நிதியியல் ஒழுக்கமுறையொன்றை சட்ட ரீதியிலான நிலைமையின் மூலம் உருவாக்குதலும், அரச நிதியியல் நடவடிக்கைகளில் ஒழிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்தலுமாகும். நடுத்தர கால அரச நிதியியல் இலக்குகளைக் காட்டுவதே இச் சட்டத்தின் பிரதானமான அம்சமாயிருக்கும். இதன்படி முக்கியமான இலக்குகள் பின்வருமாறு:-

(i) 2006ஆம் ஆண்டாகின்றபோது வரவு-செலவுப் பற்றாக்குறையை மொ.உ.உ.யின் வீதமாக 5% வீதத்துக்குக் குறைத்தலும் அதன் பின்னர் இந் நிலையைப் பேணி வருதலும்.

(ii) அரச படுகடன் 2006ஆம் ஆண்டாகின்றபோது மொ.உ.உ.யின் வீதமாக 85% வீதத்தைத் தாண்டாதிருத்தலும் 2013 ஆம் ஆண்டாகின்றபோது 60% வீதத்தைத் தாண்டாதிருத்தலும்.

(iii) ஒழிவுமறைவின்மை மற்றும் வகைப்பொறுப்புக்கூறும் தன்மை ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிதி அமைச்சர் பின்வரும் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) அரச நிதியியல் உபாய முறைகள் அடங்கிய அறிக்கை (அரச வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீட்டுடன் சேர்த்து)

(ஆ) அரச நிதியியல் நிலைமையின் நிலை பற்றிய நடு ஆண்டு அறிக்கை (ஜூன் மாத இறுதியில்)

(இ) இறுதி வரவு-செலவு நிலைமை தொடர்பான அறிக்கை (அடுத்து வரும் ஆண்டின் இறுதியில்)

(ஈ) தேர்தலுக்கு முன்னரான வரவு-செலவு நிலைமை தொடர்பான அறிக்கை (தேர்தலொன்று அறிவிக்கப்பட்டு மூன்று வார காலத்தினுள்)

(உ) பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை (மேற்படி (ஈ) அறிக்கையுடன் சேர்த்து)

## 3. நாணயம், வங்கிகள் மற்றும் விலை மட்டம்

**பண நிரம்பல்**

பண நிரம்பல் (Money Supply) என்பது, ஏதேனுமொரு தினத்தில் நாட்டிலுள்ள பணத் தொகையாகும். இலங்கை மத்திய வங்கியால் நான்கு பண நிரம்பல்களைப் பற்றிய தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

- குறுகிய பண நிரம்பல் - $M_1$
- விரிந்த பண நிரம்பல் - $M_2$
- திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் - $M_{2b}$
- மிகவும் விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் - $M_4$

(மத்திய வங்கியானது $M_3$ பண நிரம்பல் தொடர்பான தகவல்களை வெளியிடுவதில்லை)

**குறுகிய பண நிரம்பல (Narrow Money Supply)**

குறுகிய பண நிரம்பல $M_1$ என்பது பொதுமக்களிடமுள்ள நாணயங்களினதும் பொதுமக்களுக்குரியதாயுள்ள கேள்வி வைப்புக்களினதும் கூட்டுத்தொகையாகும். இது 2001ஆம் ஆண்டில் ரூபா 122 பில்லியனாயிருந்ததோடு 2002ஆம் ஆண்டில் ரூபா 139 பில்லியன் வரை 14% ஆல் அதிகரித்தது. 2001ஆம் ஆண்டின் 3.2% வளர்ச்சியுடன் ஒப்பிடுகின்றபோது 2002 ஆம் ஆண்டின் குறுகிய பண நிரம்பலின் வளர்ச்சியானது அதிகரித்திருந்தது. பொருளாதாரம் நன்நிலைக்குள்ளாகியமை, சமாதான செயற்பாட்டின் காரணமாக பொருளாதார நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தமை, வைப்புக்களின் மீதான வட்டி வீதங்கள் குறைவடைந்தமை மற்றும் பற்று வரியின் தாக்கங்கள் என்பவையே இதற்கான காரணங்களாயிருந்தன.

குறுகிய பண நிரம்பலினுள் பொது மக்களிடமுள்ள கேள்வி வைப்புக்களின் பங்களிப்பானது (நூற்று வீதம்) 2001ஆம் ஆண்டில் 46% வீதமாயிருந்ததோடு 2002ஆம் ஆண்டில் இது மாற்றமடையாதிருந்தது.

**விரிந்த பண நிரம்பல் ($M_2$)**

குறுகிய பண நிரம்பலுடன் ($M_1$), பொது மக்களுக்கு உரியதாக வர்த்தக வங்கிகளில் இருக்கும் தவணை மற்றும் சேமிப்பு வைப்புகளைக் கூட்டுவதன் மூலம் விரிந்த பண நிரம்பல் ($M_2$) பெறப்படுகின்றது. 2001ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 451 பில்லியனாக இருந்த $M_2$ 2002 ஆம் ஆண்டில் ரூபா 510 பில்லியனாக மாறி 13% வீதத்தால் அதிகரித்தது. இது 2001ஆம் ஆண்டின் 11% வீத வளர்ச்சியுடன் ஒப்பிடப்படுகின்றபோது வளர்ச்சி வேகத்தில் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல ($M_{2b}$)**

குறுகிய பண நிரம்பலுக்கு ($M_1$), உள்நாட்டு வங்கிக் கூறுகளினதும் (DBUs), வெளிநாட்டு வங்கிக் கூறுகளினதும் (FCBUs) வைப்புக்கள் உள்ளடங்கியதான வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியார் துறையின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஒத்திசைவாக்குவதன் மூலம் தயாரிக்கப்படுகின்ற திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பலானது 2002ஆம் ஆண்டில் 13% வீதத்தால் அதிகரித்தது. வங்கி முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 49% வீதத்தால் அதிகரித்தமையும் தனியார் துறையின் கடன் பெறுதல்கள் 12% வீதத்தால் அதிகரித்தமையுமே இதற்கான பிரதானமான காரணிகளாகும். (12வது புள்ளிவிபரக் குறிப்பைப் பார்க்கவும்) மேலும் உள்நாட்டுக் கடன்கள் அதிகரித்ததோடு செலாவணி வீதத்தில் மதிப்பிறக்கமும் ஏற்பட்டது. உள்நாட்டுக் கடன்களின் அதிகரிப்பில்

*12வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் $M_{2b}$ பண நிரம்பலும் அதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகளும்**

| நாணயக் கூட்டுக்கள் | பெறுமதி (ரு. பில்லியன்) |
|---|---|
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | 139 |
| வர்த்தக வங்கிகளிடமுள்ள தனியாரது தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | |
| 1. உள்நாட்டு வங்கிக் கூறுகள் | 446 |
| 2. வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகள் | 37 |
| திரட்டப்பட்ட பண நிரம்பல் ($M_{2b}$) | 622 |
| ஏதுக் காரணிகள் | |
| 1. உள்நாட்டுக் கடன்கள் (தேறிய) | 512 |
| 2. வெளிநாட்டுச் சொத்துக்கள் (தேறிய) | 110 |
| $M_{2b}$ யில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளின் கூட்டுத்தொகை | 22 |

அரச துறையினால் வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள் கணிசமான அதிகரிப்பைக் காட்டுகின்றன. 2001ஆம் ஆண்டில் சிறிதளவு தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் $M_{2b}$ அதிகரிப்புக்கு ஏதுவாயிருந்தது.

### மிகவும் விரிவாக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் - $M_4$

$M_4$ பண நிரம்பல் என்பது, $M_{2b}$ பண நிரம்பலுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்களினதும் செயற்பாடுகள் அடங்கிய நிதியியல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட பண நிரம்பலாகும். இது 2002ஆம் ஆண்டில் 14% வீதத்தால் அதிகரித்தது. 2002ஆம் ஆண்டில் $M_4$ பண நிரம்பலானது ரூபா 798 பில்லியனாயிருந்தது. இது $M_{2b}$ பண நிரம்பலை விட ரூபா 175 பில்லியன் அதிகமானதாகும். தேசிய சேமிப்பு வங்கியிலும் நிதி நிறுவனங்களிலும் பொது மக்களுக்கு உரியதாயுள்ள வைப்புக்களின் தொகையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டமையே இதற்கான பிரதானமான காரணமாயிருந்தது. $M_4$ உம் அதற்கு ஏதுவாயிருந்த காரணிகளின் தொகைகளும் 13வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

*13வது புள்ளிவிபரக் குறிப்பு*

**$M_4$ பண நிரம்பலும் அதற்கு ஏதுவாயிருந்த காரணிகளும் - 2002**

(ரூபா பில்லியன்)

| | |
|---|---|
| $M_4$ பண நிரம்பல் | 798 |
| காரணி | |
| 1. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 100 |
| 2. உள்நாட்டுக் கடன்கள் | 912 |
| 3. தேறிய நிதியல்லாத பொறுப்புக்கள் | -214 |
| 4. காரணிகளின் மொத்தம் (1+2+3) | 798 |

### ஒதுக்குப் பணம் (Reserve Money) எனப்படும் அதி பலம்வாய்ந்த நாணயம (High Powered Money)

ஒதுக்குப்பணம் என்பது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நாணயத் தாள்கள் மற்றும் நாணயக் குத்திகளையும் மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்களையும் உள்ளடக்கியதான பணத்தொகையாகும். 2002ஆம் ஆண்டில் மொத்த ஒதுக்குப்பணத் தொகைகளின் பெறுமதி ரூபா 126 பில்லியனாயிருந்தது. இது 2001 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது 12% வீத அதிகரிப்பாகும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரித்தமையின் காரணமாக மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்ததன் மூலம் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் அதிகரித்தமை. (வட-கிழக்கில் நாணயத்துக்கான கேள்வி அதிகரித்துள்ளமை இதனைப் பிரதிபலிக்கின்றது.)
2. நியதி ஒதுக்குத் தொகை வைக்கப்பட வேண்டிய வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் அதிகரித்துள்ளமை.

### நாணயப் பெருக்கி (Money Multiplier)

பண நிரம்பலுக்கும் ஒதுக்குப்பணத்திற்கும் இடையிலுள்ள தொடர்புக்கு நாணயப் பெருக்கி என விளக்கமளிக்கப்படுவதோடு 2002ஆம் ஆண்டில் பண நிரம்பல் 14% வீதத்தாலும் ஒதுக்குப்பணம் 12% வீதத்தாலும் வளர்ச்சியடைந்ததன் காரணத்தினால் நாணயப் பெருக்கியானது (பண நிரம்பல் ÷ ஒதுக்குப்பணம்) 4.92 ஆக இருந்தது. 2001ஆம் ஆண்டில் இது 4.88 ஆக இருந்தது. நாணயப் பெருக்கி அதிகரிப்பதற்கான காரணங்கள் பல உள்ளன.

(1) கொடுப்பனவு முறைமையினுள் ஏற்பட்ட புதுமைகளின் காரணமாக வைப்புக்களுக்கும் நாணயத்திற்கும் இடையிலான விகிதாசாரம் குறைவடைந்தமை

(2) நியதி ஒதுக்குத் தொகையின் தேவை ஏற்புடையதல்லாத வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் பங்கு அதிகரித்தமை.

### நாணயத்தின் வருமானச் சுற்றோட்ட வேகம் (Income Velocity of Money)

நாணயக் கூறு கைமாறுகின்ற வேகத்தைப் பிரதிபலிக்கின்ற நாணய வருமானச் சுற்றோட்ட வேகம் 2001ஆம் ஆண்டில் 2.77 இல் இருந்து 2002 ஆம் ஆண்டில் 2.7 வரை குறைவடைந்தது. இதற்கு இரண்டு விடயங்கள் காரணமாயிருந்தன.

(1) அதி உயர் நிதியியல் ஆழத்தைப் (Financial Deepening) பிரதிபலிக்கும் விதத்தில் நிதியியல் துறை விரிவடைந்தமை.

(3) பணவீக்க எதிர்பார்ப்புகள் குறைவடைந்தமை.

### நாணயக் கொள்கையும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளும்

2002ஆம் ஆண்டில் நாணயக் கொள்கையானது முக்கியமாக குறைந்த பணவீக்க நிலைமையொன்றைப் பேணிவருவதன் மீதே கவனம் செலுத்தியது. அதேபோன்று பொருளாதாரத்துக்கு மீள உயிர்ப்பூட்டுவதற்குத் தேவையான திரவத் தன்மையைப் போதியளவு வழங்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது. இதன்படி, மத்திய வங்கியானது தனது அடிப்படைக் கொள்கை வட்டி வீதமாகக் கருதப்படும் "மீள் கொள்வனவு வட்டி வீதத்தையும் நேர்மாற்று மீள் கொள்வனவு" (Repo) வீதத்தையும் 2002ஆம் ஆண்டினுள் குறைத்தது. அத்துடன் வர்த்தக வங்கிகளின் தற்காலிகத் திரவத் தன்மைத் தேவைகளுக்கு இறுதிக் கடன் கொடுப்போரான மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்ற முற்பணத்துக்காக அறவிடப்படுகின்ற "மத்திய வங்கி வட்டி வீதமொன்று" உள்ளதோடு பொதுவாக இவ் வட்டி வீத்தின் கீழ் கடன் பெறப்படுவதில்லை. 2001 திசெம்பரில் இருந்து இது 18% வீதமாக மாற்றமுறாதிருந்தது. (2003 இல் 15% வீதமாயிருந்தது)

### நாணயக் கொள்கையும் வட்டி வீதமும்

மீள் கொள்வனவு வீதம் என்பது வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் தமது மேலதிக நிதியங்களை மத்திய வங்கியிலுள்ள திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்கின்றபோது செலுத்தப்படுகின்ற வட்டி வீதமாகும். நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் என்பது வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை பிணையாக வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைப் பெற்றுக் கொள்கின்றபோது அறவிடப்படுகின்ற கருவியாகும். **மத்திய வங்கி வீதம** என்பது சந்தை வீதங்களின் திசையைக் காட்டுகின்ற வீதமாகும்.

2002ஆம் ஆண்டின் சாதகமான பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக மீள் கொள்வனவு வட்டி வீதமும் நேர்மாற்று மீள் கொள்வனவு வட்டி வீதமும் மூன்று சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டது. இதற்கிணங்க 2001இன் இறுதியாகின்றபோது முறையே 12% வீதம் மற்றும் 14% வீதமாயிருந்த இவ் வீதங்கள் 2002இன் இறுதியாகின்றபோது 9.75% வீதம் மற்றும் 11.75% வீதமாகக் குறைவடைந்தன.

### திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

2000 மற்றும் 2001ஆம் ஆண்டுகளுக்கு மாற்றமான விதத்தில் 2002ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியியல் பெருக்கானது அதிகரித்தமையினாலும், அரச நிதியியல் தொழிற்பாடுகள் பொருத்தமான விதத்தில் நெறிப்படுத்தப்பட்டமையினாலும் நாணயச் சந்தையானது தொடர்ந்து திரவத் தன்மையுடன்கூடியதாகப் பேணப்பட்டு வந்தது. மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக மேலதிகத் திரவத் தன்மையை உள்ளீர்த்துக் கொண்டதோடு, இதன் மூலம் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்ததன் ஊடாக பண நிரம்பலில் ஏற்படக்கூடியதாயிருந்த பணவீக்கத் தாக்கத்தைக் குறைப்பதற்கு முடியுமாயிற்று.

### நியதி ஒதுக்கு வீதம் (SRR)

நாணயக் கொள்கையை அமுலாக்குதலின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் நாணயக் கொள்கையைச் சந்தையின்பால் இட்டுச் செல்வதை அதிகரிப்பதற்கும் முடியுமான விதத்தில் 2002 திசெம்பர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட நாணய விதிச் சட்டம் திருத்தப்பட்டதோடு, இதற்கிணங்க மாற்றமுறும் ஒதுக்கு வீதத்தின் குறைந்தபட்ச எல்லைகள் நீக்கப்பட்டன.

### நாணய விதிச் சட்டத்தைத் திருத்துதல

இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டு அதன் செயற்பாடுகள் நிருவகிக்கப்படுகின்றதான 1949ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டமானது, கலந்துரையாடல்கள் பலவற்றின் பின்னர் முக்கியமான ஒருசில மாற்றங்கள் உள்ளடங்கியதாக 2002ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணய விதி (திருத்த)ச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டதோடு திசெம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இத் திருத்தமானது, இன்றைய பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் அதன் தேவைப்பாடுகள் தொடர்பாக மிகவும் பயனுள்ள விதத்தில் தொழிற்படுவதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கும் பொருட்டே செய்யப்பட்டது. இத் திருத்தங்களின் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(அ) மத்திய வங்கியின் குறிக்கோள்களைத் திருத்தியமைத்தல்.

(ஆ) நிருவாக அதிகார சபையையும் அதிகாரங்களை ஒப்படைப்பதற்கான ஆற்றலையும் விரிவாக்கு-

வதன் மூலம் மத்திய வங்கியின் நிபுணத்துவத்தையும் வினைத் திறனையும் அதிகரிக்கச் செய்தல்.

(இ) நாணயக் கொள்கையிலும் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கையிலும் நெகிழ்வுத் தன்மையையும் விளைவுத் திறனையும் அதிகரிக்கச் செய்தல்.

(ஈ) கொடுப்பனவு, தீர்ப்பனவு முறையை முன்னேற்றுதல்.

(உ) மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளைப் பலப்படுத்துதல்.

**(அ) மத்திய வங்கியின் குறிக்கோள்களை மாற்றுதல்**

நாணயத்தின் உள்நாட்டுப் பெறுமதியை நிலையாக வைத்திருத்தல், வெளிநாட்டுச் செலாவணி வீதத்தின் நிலைப்பாட்டைப் பாதுகாத்தல், உற்பத்தி, தொழில் நிலை மற்றும் உண்மை வருமானத்தை உயர் மட்டத்தில் பேணிவருதல் அத்துடன் இலங்கையின் உற்பத்தி வளங்களை முழுமையாக அபிவிருத்தி செய்வதை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல் போன்ற பல்தரப்பு நோக்கங்களே திருத்தத்திற்கு முன்னர் மத்திய வங்கியின் நோக்கங்களாயிருந்தன. அரை நூற்றாண்டுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட மத்திய வங்கிக்கு இவ்வாறாக, ஒருசில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதும் அத்துடன் பொருத்தமற்றதுமான நோக்கங்கள் இருப்பது அதிசயமல்ல. ஆயினும் மத்திய வங்கியொன்றின் மிகப் பயனுறுதியுள்ள முக்கியமான நோக்கம் விலை நிலைப்பாடாயிருத்தல் வேண்டுமென்பது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. விலை நிலைப்பாடானது உறுதியான பேரண்டப் பொருளாதார நிலையின் மீது பெருமளவு தங்கியுள்ளதனால், இலங்கை மத்திய வங்கியின் அடிப்படை நோக்கம், **"பொருளாதாரமும் விலை நிலைப்பாடும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஏனைய நாடுகளின் அனுபவங்களினூடாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு, நிதியியல் முறையின் நிலைப்பாடானது ஒரு நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு அத்தியாவசியமானதாயுள்ளது. ஆதலால், இதுகூட இலங்கை மத்திய வங்கியின் அடிப்படை நோக்கமொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.**

எனவே, கூட்டாக எடுத்து நோக்கப்படுகின்றபோது மத்திய வங்கியின் அடிப்படைச் செயற்பாடுகளை ஒழுங்காகப் பேணி வருவதை ஊக்குவிக்கின்ற இவ்விரு நோக்கங்களும் தற்போதுள்ள பலதரப்பு நோக்கங்களுக்குப் பகரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) மத்திய வங்கியின் நிபுணத்துவத்தையும் வினைத் திறனையும் அதிகரிக்கச் செய்தல்**

இற்றைவரை மத்திய வங்கியின் நிருவாக அதிகார சபையானது (நாணயச் சபை) மத்திய வங்கியின் ஆளுநர் (தலைவர்), நிதி அமைச்சின் செயலாளர் (உத்தியோகபூர்வப் பிரதிநிதி) மற்றும் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்றாவது உறுப்பினரையும் உள்ளடக்கியதாயுள்ளது. சிறியதொரு சபை அமைக்கப்படுவதற்கான காரணம் யாதெனில், இவ்வாறானதொன்று பெரியதொரு சபையை விட, (அ) கூட்டங்களைக் கூட்டுவதிலுள்ள நடைமுறைச்சாத்தியமான வசதி, (ஆ) தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது உடன்பாட்டுக்கு வருவதிலுள்ள வசதி, (இ) தீர்க்கப்பட வேண்டிய விடயங்களை ஆழமாக ஆராயக்கூடிய ஆற்றல் ஆகிய காரணங்களினால் வினைத் திறனுடையதாயிருக்கும் என்ற எதிர்பார்ப்பினாலாகும். ஆயினும், கடந்த ஒருசில ஆண்டுகளினுள் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் நாணயச் சபையில் கலந்துரையாட வேண்டி வருகின்ற பிரச்சினைகளின் சிக்கலான தன்மையின் காரணமாக அதன் நிபுணத்துவமும் வினைத் திறனும் விரிவானதொரு வீச்சினுள் வியாபிக்கக்கூடியவாறு மேம்படுத்தப்பட வேண்டிய தேவை உருவாகியது. ஆதலால் நாணயச் சபையின் கலந்துரையாடல்களை வெற்றிகரமாக நடத்தக்கூடிய, நிறைவேற்றதிகாரம் வாய்ந்ததல்லாத மேலதிக உறுப்பினர்கள் இருவரையும் உள்ளடக்கக்கூடியவாறு, நாணயச் சபை தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நாணயச் சபையானது தற்போது மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர், மற்றும் நிதி அமைச்சரின் விதப்புரையின் மீது மற்றும் அரசியலமைப்புச் சபையின் இணக்கப்பாட்டுடன் சனாதிபதியால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாயுள்ளது.

**(இ) நாணயக் கொள்கையிலும் வெளிநாட்டுச் செலாவணி வீதக் கொள்கையிலும் நெகிழ்வுத் தன்மையையும் விளைவுத் திறனையும் அதிகரிக்கச் செய்தல்**

(i) நாணய விதிச் சட்டமானது, பண நிரம்பலுக்குக் குறுகியதொரு வரைவிலக்கணத்தை வழங்குகின்றவாறு, வர்த்தக வங்கிகள் மற்றும் அரசு தவிர்ந்த ஏனைய நபர்கள் வசமுள்ள நாணயத் தொகையும் கேள்வி வைப்புக்களுமே பண நிரம்பலாகுமென அறிமுகப்படுத்தியிருந்தது. கடந்தகாலங்களில் இவ் வரைவிலக்கணமானது போதுமானதாயிருந்த போதிலும் நிதியியல் முறை முன்னேறியுள்ளமையின் காரணத்தினால் புதிய நிறுவனங்களும் கருவிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதன் மூலம், விரிவானதொரு வரைவிலக்கணத்தின் தேவை உணரப்பட்டது. ஆதலால் இத்தடவை திருத்தத்தின் மூலம் வரைவிலக்கணத்தை காலத்துக்கு ஏற்பவும் பொருளாதாரத்தில் உருவாகின்ற மாற்றங்களின் அடிப்படையிலும் திருத்தியமைப்பதற்கான சுதந்திரம் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. (இதன்படி ஏற்கனவே $M_2$, $M_{2b}$ மற்றும் $M_4$ அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.)

(ii) கடன் வழங்குவதன் மூலம் வங்கியினால் பணம் படைக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு நாணய விதிச் சட்டத்தின் மூலம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த நிதியியல் கொள்கைக் கருவி யாதெனில் வங்கியினால் பேணப்பட்டு வர வேண்டிய நியதி ஒதுக்கு வீதத்தை விதிப்பதாகும். நியதி ஒதுக்குவீதத் தேவையானது வர்த்தக வங்கிகளின் மீது மாத்திரம் சுமத்தப்பட்டிருந்ததோடு இதுகூட வைப்புப் பொறுப்புக்களுக்கு மாத்திரமே மட்டுப்பட்டதாயிருந்தது. அதேபோன்று, பல்வேறுபட்ட வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பில் ஒன்றுக்கு ஒன்று மாற்றமான நிலையான உயர் மற்றும் தாழ் மட்ட எல்லைகள் நாணய விதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைத் தொடர்ந்து பண நிரம்பல் தொடர்பான வரைவிலக்கணத்தையும் அதேபோன்று பண நிரம்பலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற நிறுவனங்கள் மற்றும் கருவிகளின் பட்டியலையும் திருத்த வேண்டிய தேவை நிலவியது. அதேபோன்று மத்திய வங்கியினால் நாணயக் கொள்கைகள் அமுலாக்கப்படுகின்றபோது நியதி ஒதுக்குத் தேவை போன்ற சந்தையல்லாத கருவிகளிலிருந்து நீங்குதல் நாணய விதிச் சட்டத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளின் மூலம் தடுக்கப்பட்டிருந்ததன் காரணத்தினால் அவ்வெல்லைகளை நீக்குகின்ற தேவை மேலெழுந்திருந்தது. அதேபோன்று குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலன்றி நியதி ஒதுக்குக்கு வட்டி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் நாணய விதிச் சட்டத்தில் இருக்கவில்லை. இவ்விடயங்களைக் கவனத்திற்கொண்டு பின்வரும் திருத்தங்கள் இந்தடவை மேற்கொள்ளப்பட்டன.

(அ) வர்த்தக வங்கிகள் தவிர்ந்த ஏனைய நிதி நிறுவனங்கள் மீதும், வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் மீதும் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஒதுக்குத் தேவையை விதிப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டமை.

(ஆ) ஒதுக்குத் தேவை தொடர்பாகவிருந்த உச்ச வரம்பு மற்றும் குறைந்தபட்ச சட்ட வரையறைகளை நீக்குதல் மூலம், பொருத்தமான வீதாசாரங்களைத் தீர்மானிக்கின்ற சுதந்திரம் நாணயச் சபைக்கு வழங்கப்பட்டமை.

(இ) தேவையெனக் கருதப்படுமிடத்து நியதி ஒதுக்குப்பணத்தின் மீது வட்டி செலுத்துவதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டமை.

(ஈ) ஒதுக்குப்பணத்தைக் கணிப்பிடுகின்ற விதம் தொடர்பாகவும், ஒதுக்குப்பணத் தேவை நிறைவேற்றப்படாமையின் காரணத்தால் அறவிடப்படும் தண்டத் தொகையைக் கணிப்பீடு செய்கின்ற விதம் தொடர்பாகவும் கூடுதலான நெகிழ்வுத் தன்மையை மத்திய வங்கிக்கு வழங்குதல்

(iii) நாணய விதிச் சட்டமானது, நிலையான செலாவணி வீத முறை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த காலகட்டத்திலேயே தயாரிக்கப்பட்டிருந்ததன் காரணத்தினால், மத்திய வங்கியால் சர்வதேச ரீதியில் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ரூபாவைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதை இலகுவாக்கும் பொருட்டு வர்த்தக வங்கிகளுடன் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றபோது கடுமையான சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியதாயிருந்தது. இவ்வாறான கடுமையான நிபந்தனைகள் தற்போதைய மிதக்கவிடப்பட்ட செலாவணி வீத முறைக்கு ஏற்புடையதாகாது. ஆதலால், திருத்தத்தின் மூலம், சர்வதேச ரீதியில் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ரூபாவைச் சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய விதத்தில் செயலாற்றுவதற்கு மத்திய வங்கிக்குள்ள

பொறுப்பைப் பேணிவருகின்ற அதேநேரம் அதற்காகக் கூடுதலான நெகிழ்வுத் தன்மையொன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

### (ஈ) கொடுப்பனவு, தீர்ப்பனவு முறையை முன்னேற்றுதல்

தற்போது மத்திய வங்கியானது, வர்த்தக வங்கிகளுக்கிடையிலும் முதனிலை வணிகர்களுக்கிடையிலும் நடைபெறுகின்ற நிதியக் கொடுக்கல் வாங்கல்களுக்காக தீர்ப்பனவு வசதிகளைச் செய்து கொடுக்கின்றபோது, அவர்களால் மத்திய வங்கியில் பேணிவரப்படுகின்ற நடைமுறைக் கணக்குகளே பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான அதிகூடிய பெறுமதிகளைக்கொண்ட நாணயக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதேநேர அடிப்படையில் நிறைவேற்றப்படக்கூடிய தன்னியக்க முறைகள் தற்போது அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. (RTGS) இதன் மூலம் கொடுக்கல் வாங்கலும் அதைத் தீர்ப்பனவு செய்தலும் ஒரே நேரத்தில் நடைபெறுவதன் ஊடாக இலங்கையின் தீர்ப்பனவு முறைமையை சர்வதேச ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள முறைமைகளது மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று, அரச பிணையங்கள் மற்றும் மத்திய வங்கிப் பிணையங்கள் வெளியிடப்படுகின்றபோது மற்றும் கைமாற்றப்படுகின்றபோது அவற்றை மத்திய வைப்பு முறையின் கீழ் மின்னியல் ஊடகத்தின் மூலம் நடத்துவதற்கான முறையொன்றும் (SSSS) அறிமுகப்படுத்தப்படவுள்ளது. தன்னியக்கக் கொடுப்பனவு முறையின் கீழ், வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்களுக்கிடையே இவ்வாறான பிணையங்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்தலும் மின்னியல் ஊடகத்தின் மூலம் நடத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இம் முறைகளைச் செயற்படுத்துவதற்காக நாணய விதிச் சட்டத்தைத் திருத்தி பின்வரும் விடயங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- முறைமைகளை நிறுவுதலும் தெரிவு செய்யப்பட்ட உரிமைகளையும் பொறுப்புக்களையும் உருவாக்குத்லும்.
- இம் முறைமையின் ஒழுங்கான செயற்பாட்டுக்குத் தேவையாயுள்ள, நாளினுள் தேவைப்படும் திரவத் தன்மை வசதிகளை வழங்குவதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரமளித்தல்.
- கொடுக்கல் வாங்கல்களில் இறுதித் தன்மையையும் மாற்ற முடியா நிலையையும் உருவாக்குதல்.
- மின்னியல் அறிக்கைகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் செல்லுபடியாகும் தன்மையையும் சட்ட ரீதியான தன்மையையும் பெற்றுக் கொடுத்தல்.
- கொடுப்பனவு, தீர்ப்பனவுடன் தொடர்புடைய செயற்பாடுகளை வெளிவாரியான நிறுவனங்களைக்கொண்டு செயவதற்கான இயலுமையைப் பெற்றுக் கொடுத்தல்.

### (உ) மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் செயற்பாடுகளைப் பலப்படுத்துதல்

முறிவடைந்த வங்கிகள் தொடர்பான நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் உரிமம் பெற்ற வங்கிகள் தொடர்பில் ஏற்புடைமையாகாதிருந்தமைக்கான காரணம், இவ் வங்கிகள் 1995 இல் இருந்து வங்கிச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டமையேயாகும். ஆதலால், இத் திருத்தங்கள் மூலம் குறிப்பட்ட ஏற்பாடுகள் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் தொடர்பாகவும் ஏற்புடையதாகக்கூடியவாறு விஸ்தரிக்கப்பட்டது. முறிவடைந்த வங்கிகளை ஒழிப்பது தொடர்பான வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளை மிகத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கும் திருத்தத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திருத்தங்கள் அவசர விடயங்கள் தொடர்பாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டவையாகும். தற்போது அமுலிலுள்ள இலங்கையின் நிதியியல் சட்டங்கள் மற்றும் நிதி நிறுவனங்களை நவீனமயமாக்குதல் வேலைத் திட்டத்தின் கீழ் சர்வதேச நிதியியல் முறைகளினூடாக ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய நிதியியல் முறையொன்றை உருவாக்கும் பொருட்டு எதிர்வரும் ஓரிரு வருடங்களினுள் நாணய விதிச் சட்டத்தை முழுமையாகவே திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் (Active Open Market Operation)

இற்றைவரையிருந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகளாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, 2003இன் ஆரம்பத்தில் இத் தொழிற்பாடுகள் "தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளாக" (Active Open Market Operation) மாற்றப்பட்டன. இம் முறையின் பிரதானமான நோக்கம் யாதெனில், நிதியியல் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு, மத்திய வங்கிக்கு சந்தைத் திரவத் தன்மையை மிகவும் வினைத் திறனுடையதாக்குவதற்கான இயலுமையை உருவாக்குதலாகும். இதனூடாக சந்தையின் பங்குபற்றுனர்கள் தமது திரவத் தன்மையை மிகவும் வினைத் திறனுடன்கூடியதாக முகாமை செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

பொருளாதாரத்தின் நாணயத் (மொத்தக் கடன்கள்) தொகையையும் அதன் செலவினத்தையும் (வட்டி வீதம்) மாற்றுவதன் மூலம் பொருளாதார மற்றும் நிதியியல் நிலைப்பாட்டை அடைந்துகொள்ளுதல் நாணயக் கொள்கையின் இறுதி நோக்கமாகும். இதற்கான நாணயக் கொள்கைக் கருவியொன்றாக மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்துகிறது. 2003 மார்ச் மாதம் 03 ஆம் திகதி மத்திய வங்கியானது தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையிலிருந்து நீங்கி மிகத் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையொன்றுக்கு மாறியது. இப் புதிய முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஏதுவாயிருந்த காரணிகள், இதன் பிரதானமான பண்புகள் மற்றும் இம் முறையிலுள்ள அனுகூலங்கள் யாவை என்பதைப் பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

### தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

2003 பெப்ருவரி மாதம் இறுதி வரை நிலவிய இத் தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையின் கீழ், மத்திய வங்கியின் குறுகிய கால திரவத் தன்மையை முகாமை செய்யும் பொருட்டு மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளும், நீண்டகால அடிப்படையில் திரவத் தன்மையை முகாமை செய்யும் பொருட்டு கழிவிடல் மற்றும் மீள் கழிவிடல் வசதிகளும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வழங்கப்பட்டன.

இவ் வசதிகளானவை, பிரதானமாக மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற வட்டி வீத்தின் கீழ் வழங்கப்பட்டனவென்பதோடு, அவற்றை பங்கேற்பு நிறுவனங்கள் தமது தற்றுணிபின்படி பயன்படுத்தின.

இம் முறையின் கீழ் மீள் கொள்வனவு வீதத்துக்கும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்துக்கும் இடையிலான வட்டி வீச்சினுள் மத்திய வங்கியினால் வட்டி வீதங்களை நிலையாகப் பேணிவர இயலுமாயிருக்கும். அதேபோன்று இக் கொள்கை ரீதியிலான வட்டி வீதங்களைப் பொருத்தமான விதத்தில் மாற்றுவதன் மூலம் மத்திய வங்கியினால் நிதியியல் கொள்கை இலக்குகளை அடைந்துகொள்ள முடியுமாயிற்று. எவ்வாறாயினும், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதன் வரையறைகளை ஆராய்கின்றபோது, இம் முறையை மேலும் முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் இருந்தன.

(அ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இருந்த வசதிகளை பங்கேற்பு நிறுவனங்கள் தமது தற்றுணிபின்படி பயன்படுத்தியமையினால், மத்திய வங்கி நேரடியாகச் சந்தைத் திரவத் தன்மையை முகாமை செய்வதனையும், அதன் மூலம் நிதியியல் இலக்குகளை அடைந்துகொள்வதை உறுதி செய்வதனையும் இயலுமாக்கக்கூடிய நிதியியல் கருவியொன்று மத்திய வங்கியிடம் இருக்கவில்லை.

(ஆ) திறந்த சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்கான வட்டி வீதங்கள் மத்திய வங்கியினால் நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்டதோடு, அவை சந்தையில் நிலவுகின்ற வட்டி வீதங்களோடு தொடர்புடையனவாயிருந்த போதிலும் பெரும்பாலும் சந்தையல்லாத காரணிகளின் தாக்கங்களுக்கு உள்ளாகின. ஆதலால், இவ் வசதிகள் சந்தைச் சக்திகளின் மீது தீர்மானிக்கப்படுகின்ற வட்டி வீதங்களின் கீழ் வழங்கப்படுமாயின், சந்தையை நோக்கியதான நாணயக் கொள்கைக் கருவிகளின் பயன்பாட்டுக்கு ஏதுவாயிருக்குமென்பதோடு, நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் சந்தை நலன் மிக்கதாகவும் மிகவும் ஏற்புடையதாகவும் அமையலாம்.

(இ) மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களுக்கிடையிலான வீச்சினுள் வட்டி வீதங்கள் பாரிய அளவில் ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகக்கூடியதாய் இருந்தது. இவ் வட்டி வீச்சின் உச்ச எல்லைக்கு அல்லது வீச்சின் ஆகக் குறைந்த எல்லைக்கு அண்மியதாக வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதங்கள் நிலவக்கூடிய போக்கைக் காணமுடியுமாயிருந்தது. ஆதலால், நிலவுகின்ற மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தின் கீழ் வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதங்கள் ஏறத்தாழ 200 அடிப்படை இலக்கங்களால் ஏற்றவிறக்கங்களுக்கு உள்ளாகலாம். அவ்வாறான பாரிய ஏற்ற இறக்கங்கள் ஏற்படுவதற்குள்ள வாய்ப்புகளைத் தவிர்க்கக்கூடிய முறையொன்று இருத்தலானது நிதியியல் சந்தை நிலைப்பாட்டைப் பேணும் பொருட்டு மிக முக்கியமானதாயுள்ளது.

(ஈ) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழுள்ள வசதிகளை பங்கேற்பு நிறுவனங்களால் தற்றுணிபின்படி பயன்படுத்தக்கூடியதாய் இருந்தமையால், பங்கேற்பு நிறுவனங்களுக்கு தமது திரவத் தன்மை முகாமைத்துவத்தை முன்னேற்றுவதற்கோ அல்லது சந்தைப் போட்டி நிலையை ஊக்குவிப்பதற்கோ இது

தூண்டுதலளிக்கவில்லை. சிறந்ததொரு திரவத் தன்மை முகாமையும் உயர் போட்டி நிலையும் சந்தையின் வினைத் திறனை அதிகரிப்பதற்குக் காரணமாயமைவதோடு, இது நிதியச் செலவினத்தைக் குறைப்பதற்கும் காரண-மாயமைகிறது.

### தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

நாணயக் கொள்கையை அமுலாக்குதலானது, சந்தையை முன்னோக்கியதான மேலுமொரு முன்னெடுப்பாகுமென்பதோடு, அவற்றின் விளைவுத் திறனை முன்னேற்றுவதற்காக மத்திய வங்கியால் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இம் முறையின் ஊடாக நாணயச் சந்தையில் போட்டி நிலை ஊக்குவிக்கப்-படுவதோடு, பங்கேற்பு நிறுவனங்களுக்கு தமது திரவத் தன்மை முகாமைத்துவத்தைச் சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான தூண்டுதலும் அளிக்கப்படுகிறது. இம் முறையானது, நாணயக் கூட்டுக்களை இலக்காகக்கொண்ட நாணயக் கொள்கை வரையறை ஒன்றினுள் நடைமுறைப்-படுத்தப்படுகிறது. ரூபா மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து நாணயக் கொள்கையின் பெயரளவிலான உறுதுணையாக செலாவணி வீதம் தொடர்ந்தும் செயற்படாமையினால் நாணய இலக்குகள் மேலும் முக்கியத்துவம்வாய்ந்ததாக மாறியது. இக் கொள்கை வரையறையினுள் இறுதி இலக்கான பொருளாதார மற்றும் விலை நிலைப்பாடானது விரிந்த பண நிரம்பலின் மீதான இடைப்பட்ட இலக்குகளின் ஊடாக அடைந்துகொள்ளப்படுவதோடு, இந்த இடைப்பட்ட இலக்கானது ஒதுக்குப்பணத்தின் மீதான நெறிப்-படுத்தல் இலக்குகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றது. நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் தாக்கத்தை உடனடியாகப் பிரதிபலிக்கின்ற வங்கிகளுக்-கிடையிலான ஒரு நாள் வட்டி வீதத்தை குறுகியதொரு வீச்சினுள் நிலையாகப் பேணி-வருகின்ற அதேநேரம் இலக்காகக் கொள்ளப்பட்ட ஒதுக்குப்பணத்தை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இம் முறையிலுள்ள அடிப்படைப் பண்புகள் யாதெனில்,

i. வட்டி வீத வீச்சு
ii. வங்கிகளுக்கிடையிலான வட்டி வீதம். வட்டி வீதத்தை வீச்சிடையினுள் நிலையாகப் பேணிவரும் பொருட்டு மீள் கொள்வனவுக்கான அல்லது நேர்மாற்று மீள் கொள்வனவுக்கான ஏலவிற்பனையை நாளாந்தம் நடத்துதல்.
iii. நிரந்தர (நிலையியல்) வசதிகள்
iv. நீண்டகாலத் திரவத் தன்மையை வழங்குவதற்கு அல்லது உள்ளீர்த்துக் கொள்வதற்காக மத்திய வங்கியின் தற்றுணிபின்படி திறைசேரி உண்டியல்களை/முறிகளைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல்.

### தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் அனுகூலங்கள்

இம் முறையானது பங்கேற்பு நிறுவனங்களுக்கும் அதேபோன்று மத்திய வங்கிக்கும் சாதகமானதாகும். திறந்த சந்தை வசதிகள், நிருவாக ரீதியில் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதத்துக்குப் பதிலாக சந்தை வட்டி வீதங்களின் மீது வழங்கப்-படுமாகையால் பங்கேற்பு நிறுவனங்களுக்கு இதன் மூலம் அனுகூலங்கள் கிடைக்கின்றன. சந்தை வட்டி வீதமானது வட்டி வீத வீச்சிடையினுள் உள்ளதன் காரணத்தினால் முன்னைய முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது பங்கேற்பு நிறுவனங்களுக்கு அவர்களது மீள் கொள்வனவு வசதிகளுக்காக தற்போதுள்ளதை விடக் கூடுதலான வட்டி வீதமொன்று கிடைப்பதோடு நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளுக்கு தற்போதுள்ளதை விடக் குறைநத வட்டி வீதமொன்றைச் செலுத்த வேண்டி வருகின்றது. மேலும், பங்கேற்பு நிறுவனங்கள் தமது திரவத் தன்மை மதிப்பீடுகளை மிகவும் துல்லியமாகத் தயாரிப்பதற்கும் திரவத் தன்மை முகாமைத்துவ முறைகளை முன்னேற்றிக் கொள்வதற்கும் முயற்சிப்பார்களாதலால், சந்தை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதைத் தொடர்ந்து வட்டி வீதங்களில் ஏற்படக்கூடிய தளம்பல்களையும் குறைத்துக்கொள்வதற்கு முடியுமாயிருக்கும். ஆதலால், பங்கேற்பு நிறுவனங்கள் தமது திரவத் தன்மை முகாமைத்துவத்தை முன்னேற்றிக்-கொள்வதற்கு இம் முறையின் மூலம் ஊக்கமளிக்கப்-படுவதால் அவர்கள் மேலதிக ஒதுக்குகளை வைத்திருத்தல் குறைக்கப்படுமென்பதோடு, இதன் மூலம் அவர்களது நிதியச் செலவினமும் குறைவடைகின்றது. நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்பான சமிக்ஞைகளை வழங்குகின்ற வட்டி வீத வீச்சிடையானது எப்போதும் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுவதோடு, வட்டி வீத வீச்சிடையை மாற்றுவதற்கு அல்லது மாற்றாதிருப்பதற்கு எடுக்கப்படும் தீர்மானமானது, அத் தீர்மானத்துக்கு அடிப்படையாய் அமைந்த நிலைமைகள் தொடர்பான கூற்றொன்றுடன் பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடப்படுதலும் வேண்டும். இதன் மூலம் சந்தையில் பங்கேற்பவர்கள் அறிவூட்டப்படுவார்களென்பதோடு, இது நாணயக் கொள்கை நிலைப்பாடு மாற்றப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பான மேலதிக ஊகங்களை இல்லாமல் செய்யும்.

இம் முறையின் கீழ் மத்திய வங்கியினால் சந்தைத் திரவத்தன்மை தீவிரமான விதத்தில் முகாமை செய்யப்படுகிறது. ஆதலால் நாணயக் கூட்டுக்களின் மீதான இலக்குகளை மிகவும் பயனுள்ள விதத்தில் அடைந்து கொள்வதற்கு முடியுமாயிருப்பதோடு, இதனூடாக இறுதி இலக்கான நாட்டின் பொருளாதார மற்றும் விலை நிலைப்பாட்டை அடைந்துகொள்ள முடியுமாயிருக்கும்.

### மத்திய வங்கியை நவீனமயமாக்கல்

நிதியியல் முறைமைகளில் அதிகரித்துவரும் சிக்கல் நிலைமையினாலும், மாற்றத்துக்குள்ளாகின்ற உலகினுள் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மத்திய வங்கிகளின் கடமைப் பொறுப்புக்கள் தொடர்பான புதுச் சிந்தனைகளின் காரணத்தினாலும் உலகம் பூராவுமுள்ள மத்திய வங்கிகள் மாற்றமுற வேண்டிய தேவை உருவாகியுள்ளது. இம் மாற்றங்கள் தமது பொருளாதாரத்தினுள் பயனுள்ள விதத்தில் தொழிற்படுவதற்குத் தேவையான ஆற்றல்களை அடைந்துகொள்ளும் பொருட்டே தேவைப்படுகின்றது. இத் தேவையை உணர்ந்துள்ள இலங்கை மத்திய வங்கியானது, மத்திய வங்கி முறை பற்றிய புதிய அணுகுமுறைகளின்படி சென்று மீள் கட்டமைப்பிற்கும் இதன் மூலம் மேற்படி மாற்றங்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய ஆற்றலை அடைந்துகொள்வதற்குமான நவீனமயமாக்கல் வேலைத்திட்டமொன்றை 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

உலக வங்கியினாலும் சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தினாலும் (SIDA) வழங்கப்படுகின்ற நிதியத்தின் கீழ் நவீனமயமாக்கல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு திட்டமிடலுக்கான விசேட மத்திய வங்கி நவீன-மயமாக்கல் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 2002 இன் இறுதி வரையிலான இக் கருத்திட்டத்தின் தொழிற்பாடுகள் பற்றிய விளக்கம் கீழே தரப்-பட்டுள்ளது.

### அடிப்படை நோக்கங்கள்

2002 டிசெம்பர் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் திருத்தங்களின் மூலம் இலங்கையின் பயனுள்ள வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இயலுமான விதத்தில் மத்திய வங்கியானது தனது நோக்கங்-களுக்கு மீள வரைவிலக்கணமளித்ததோடு, (அ) பொருளாதார மற்றும் விலை நிலைப்பாடு, (ஆ) நிதியியல் முறைமையின் நிலைப்பாடு ஆகிய புதிய இரண்டு நோக்கங்களையும் தேர்ந்தெடுத்தது. இந்த இரண்டு நோக்கங்களும் இற்றைவரை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட பல்தரப்பு நோக்கங்களிலிருந்து மாறுபட்டவைகளாகும். இதன் மூலம் மத்திய வங்கி முறை பற்றிய சர்வதேச ரீதியில் பின்பற்றப்படுகின்ற மிகச் சிறந்த நடைமுறைகளின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை பிரதானமான துறைகளில் மாத்திரம் ஈடுபடுத்தக்கூடியதாயிருக்கும். புதிய அடிப்படை நோக்கங்கள் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து வங்கியினால் ஆற்றப்படவேண்டிய ஒழுங்கு-முறையாக்கல் மற்றும் முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் பின்வருமாறு:-

- அடிப்படை நோக்கங்களல்லாத தொழிற்பாடுகள் தொடர்பான அதிகாரத்தை ஒப்படைத்தல்.
- புதிய கடமைப் பொறுப்புகளை மிகவும் வினைத் திறனுடனும் பயனுள்ள விதத்திலும் நிறைவேற்று-வதற்கான ஒழுங்கமைப்பு ரீதியிலான மாற்றங்களை உருவாக்குதல்.
- இதில் மனித மூலதன வளத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு புதிய மனித வளக் கொள்கைகளை உருவாக்குதல்.
- உரிய காலத்துக்கு முன்னர் ஓய்வு பெற விரும்புபவர்களுக்கு வெளியேறுவதற்கான பொறிமுறையொன்றை வழங்கும் பொருட்டு சுயமாக ஓய்வு பெறும் முறையொன்றை அமுலாக்குதல்.
- வங்கியின் புதிய மாற்றங்களுக்கு ஏற்புடைய-வாறான சட்ட ரீதியான திருத்தங்களை மேற்-கொள்ளுதல்.

### அடிப்படை நோக்கங்களல்லாத தொழிற்பாடுகள் தொடர்பான அதிகாரத்தை ஒப்படைத்தல்

வங்கியின் அடிப்படை நோக்கங்கள் மீது கவனம் செலுத்தப்படுகின்ற அதேநேரம் அடிப்படை நோக்கங்களல்லாத தொழிற்பாடுகளை ஒப்படைக்கும் பொருட்டு, பின்வரும் விடயங்கள் அமுலாக்கப்-பட்டன.

(அ) காசோலைகள் தீர்ப்பனவு முறை மற்றும் நேரடியாகத் தொடர்புபடாத நிதிய மாற்றல்கள் முறையின் கீழ் நெறிப்படுத்தல்களை மேற்-கொண்ட மத்திய வங்கியின் ஒரு பிரிவான

இலங்கை தன்னியக்க தீர்ப்பகமானது 2002 ஏப்ரில் மாதத்தில் லங்கா கிளியர் (தனியார்) கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. இது மத்திய வங்கி மற்றும் வர்த்தக வங்கிகள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் உரித்தான தொரு அமைப்பாகும். புதியதொரு முகாமைத்துவத்தையும், தொழில்நுட்பத்தையும் பெற்றுக்கொள்வதன் மூலமும் செலவினத்தில் வினைத் திறனுடன்கூடிய நெறிப்படுத்தல் முறைமையொன்றை உருவாக்கிக்கொள்வதன் மூலமும் காசோலைகள் தீர்ப்பனவு மற்றும் மின்னியல் நிதிய மாற்றல்கள் முறைமையில் வினைத் திறனை அதிகரிக்கச் செய்தல் இவ்வொப்படைப்பின் குறிக்கோளாகும்.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

(இ) பிரதேச அபிவிருத்தி வங்கிகளால் வெளியிடப்பட்ட பங்கு மூலதனங்களில் மத்திய வங்கி ஏற்றுள்ள பங்குகளில் நூற்றுக்கு 20க்கு மேலதிகமாயுள்ள பங்குகளை பொதுத் திறைசேரியிடம் ஒப்படைத்தல்.

### ஒழுங்குமுறையான மாற்றங்கள்

அடிப்படை நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற புதிய ஒழுங்குமுறைக் கட்டமைப்பொன்றின் கீழ் ஆரம்ப நோக்கங்கள் அல்லது கடமைகளுக்கு ஏற்புடைய பிரிவுகளின்படி திணைக்களங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, விலை நிலைப்பாடு, நிதியியல் முறைமையின் நிலைப்பாடு, முகவராண்மை மற்றும் தொழிற்துறைச் செயற்பாடுகள் மற்றும் நிறுவனப் பணிகள் என்றவாறாகும். இச் செயற்பாட்டின்போது பின்வரும் மாற்றங்கள் அமுலாக்கப்பட்டன.

(அ) அபிவிருத்தி நிதித் திணைக்களமும் கிராமியக் கடன் திணைக்களமும் ஒருங்கிணைக்கப்பட்டதோடு பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலும் வலுவூட்டும் பொருட்டு இது பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டது.

(ஆ) சர்வதேச மற்றும் உள்நாட்டு நெறிப்படுத்தல் தொழிற்பாட்டுத் துறைகளில் மிகத் தீவிரமாகச் செயலாற்றுவதற்கும் நாணயச் சந்தையில் கொடுப்பனவு, தீர்ப்பனவுப் பொறிமுறையையும் உள்ளகத் தொழிற்பாடுகளையும் மேலும் வலுவூட்டும் பொருட்டும் வங்கித் தொழில் திணைக்களம் சிறப்பியல்புவாய்ந்த நான்கு திணைக்களங்களாகப் பிரிக்கப்பட்டது.

### புதிய மனித வளக் கொள்கைகளை உருவாக்கிக்கொள்ளல்

தொழில்சார் அடிப்படையுடன்கூடிய சிறப்பாக அமையப்பெற்ற முகாமைத்துவக் கலாச்சாரத்தை நோக்கிச் செல்வதற்கும் மனித வளங்களைக் கட்டியெழுப்புவதற்குமான புதிய மனித வளக் கொள்கைகள் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### சுயமாக ஓய்வு பெறும் முறையை அமுலாக்குதல்

ஏனைய விடயங்களில், நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் மீள் கட்டமைப்புச் செயற்பாடுகளினுள், வங்கியின் நோக்கங்கள், கடமைகள் மற்றும் உள்ளமைப்பை மீள அமைத்தல், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்குரிய செயற்பாடுகளை ஆய்வு செய்தல் மற்றும் அத் தொழிற்பாடுகளை தன்னியக்கமாக்குதல், மனித வளங்களின் தேவைப்பாடுகள் பற்றி மீள மதிப்பீடு செய்தல், நடவடிக்கைகளை மீளத் திட்டமிடுதல், ஒருசில தொழிற்பாடுகளை வெளிவாரியான நிறுவனங்களுக்கு ஒப்படைத்தல் ஆகியன உள்ளடங்குகின்றன. இச் செயற்பாட்டின்போது, ஒருசில ஊழியர் பிரிவினுள் தேவையை விஞ்சிய மிகையொன்று இருக்கலாமென்பது தெளிவாகியது. இதன்படி ஒருசில ஊழியர் பிரிவுகளுக்காக சுயமாக ஓய்வு பெறும் முறையொன்று வங்கியினால் முன்வைக்கப்பட்டது. இம் முறையின் மூலம் போதிய மற்றும் முழுமையான ஓய்வூதிய நன்மைகள் முன்வைக்கப்பட்டதோடு இது பெரும்பாலான ஊழியர்கள் சுயமாக ஓய்வு பெறுவதைத் தூண்டுவதாயிருந்தது. இதன்படி 2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஊழியர்கள் 690 பேர் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்கள். தொழிற்பாடுகளின் நடைமுறைகள் எளிமையாக்கப்படல், தொழிற்பாடுகளுக்குரிய செயற்பாடுகள் தன்னியக்கமாக்கப்படல், வெளிவாரியான நிறுவனங்களிடம் தொழிற்பாடுகள் ஒப்படைக்கப்படல் ஆகியவற்றின் காரணமாக எஞ்சிய பணியாளர்களைப் பயன்படுத்தி மிகச் சிறந்ததொரு பணியை வழங்குவதற்கு வங்கியால் முடியுமாயிற்று.

### சட்டச் சீர்திருத்தங்கள்

நிதியியல் துறையின் சீர்திருத்தங்களுக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு நாணய விதிச் சட்டம், வங்கிச் சட்டம், கடன் அறவீட்டுச் சட்டம், நிதிக் கம்பனிகள் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைச் சட்டம் ஆகியவற்றில் ஒருசில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமையும் ஒருசில சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டமையும்.

### நிருவாகம், தகவல்களை வெளிப்படுத்துதல் மற்றும் ஒழிவுமறைவின்மை பற்றிய கோட்பாடு

வங்கியினுள் நிர்வாகம் பற்றிய கோட்பாடு பயன்படுத்தப்படுவதை மேலும் முன்னேற்றும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நாணய விதிச் சட்டம் திருத்தப்பட்டதன் மூலம் நாணயச் சபையின் உறுப்பினர்களது எண்ணிக்கை 5 வரை அதிகரிக்கப்பட்டமை.
- ஆலோசனைத் தொழில்நுட்பக் குழு முறை நிறுவப்பட்டமை.
- வங்கியின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத் தொழிற்பாடுகள் வலுவூட்டப்பட்டமை.
- வங்கியின் புதிய கணக்கு வரையறையாக சர்வதேச கணக்குத் தர நியமங்கள் ஏற்படுத்தப்பட்டமை.
- புதிய உள்ளகக் கணக்காய்வு அதிகாரப் பத்திரமொன்று தேர்ந்தெடுக்கப்பட்டமை.

### வர்த்தக வங்கித் தொழிற்பாடுகள்

2002ஆம் ஆண்டில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கித் தொழிற்பாடுகள் வளர்ச்சி கண்டன. இதனை முழுமையாகவே உள்நாட்டு வங்கிக் கூறுகளில் காணக்கூடியதாயிருந்தது. 2001 ஆம் ஆண்டில் 25 ஆக இருந்த வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 2003 ஆம் ஆண்டில் 23 ஆகக் குறைவடைந்தது. இது இரண்டு வெளிநாட்டு வங்கிக் கிளைகள் (ஹபீப் வேன்க் ஏ.ஜீ.சூரிச் மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்) உள்நாட்டு வங்கிக் கிளைகள் இரண்டின் மூலம் (அதாவது ஹற்றன் நெஷனல் வங்கி மற்றும் நேஷன் ட்றஸ்ற் வங்கியினால்) பொறுப்பேற்கப்பட்டதன் பெறுபேறாகும். 2002 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 12 ஆகக் குறைவடைந்ததோடு, உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது.

2002ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் ரூபா 36 பில்லியனால் (18%) அதிகரித்தது. இத் திரவச் சொத்துக்களில் பின்வரும் சொத்துகள் அடங்குகின்றன.

- கைவசமுள்ள பணம்
- மத்திய வங்கியால் அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைகள்
- கைவசமுள்ள வெளிநாட்டு நாணயம்
- திறைசேரி உண்டியல்கள்
- திறைசேரி முறிகள்
- வர்த்தக உண்டியல்கள்

வரையறுக்கப்பட்ட பிரமுக்க வங்கியின் உரிமப் பத்திரம் மத்திய வங்கியால் 2002 திசெம்பர் மாதத்தில் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மொத்த "உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின்" எண்ணிக்கை 13 வரை குறைவடைந்தது.

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்குமிடையிலான வேறுபாடு

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கி** என்பது, ஏனைய நிதியியல் பணிகளுடன் வாடிக்கையாளர்களுக்காக காசோலைகள் மூலம் பண அனுப்பீடுகளைச் செய்வதற்கும் வேண்டுகின்றபோது பணத்தை மீளப் பெறுவதற்கும் இயலுமான நடைமுறைக் கணக்குகளைப் பேணிவருவதற்கு இலங்கை மத்திய வங்கியால் உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள வங்கி நிறுவனமாகும். அதேபோன்று இவ் வங்கிகள் வட்டி செலுத்துகின்றதும் குறுகிய கால அறிவித்தலொன்றின் மூலம் பணத்தை மீளப் பெறவும் முடியுமான சேமிப்பு வைப்புக்கள் மற்றும் தவணை வைப்புக்களையும் பேணிவருகின்றன. வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகராகவும் செயற்படுகின்றது. **உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி** என்பது வங்கிச் சட்டத்தின் கீழ் சிறப்பியல்புவாய்ந்த வங்கித் தொழில் நடவடிக்கைகளைப் பேணிவருவதற்கு இலங்கை மத்திய வங்கியால் உரிமப் பத்திரம் பெற்றுள்ள நிதி நிறுவனமாகும்.

2002ஆம் ஆண்டின் இறுதியில் வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1163 ஆக இருந்ததோடு, வங்கிக் கனவளவு (அதாவது, 10,000 நபர்களுக்கு பணிபுரிகின்ற வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை) 0.81 ஆக இருந்தது. உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 329 ஆகும்.

### விலைச் சுட்டெண்களும் பண வீக்கமும்

2002ஆம் ஆண்டில் பண வீக்க வேகம (Rate of Inflation) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி 9.6% ஆகும். இது 2001 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 14.2% வீதத்துடன் ஒப்பிடுகின்றபோது குறைவாகும். ஆயினும் இது ஓர் உயர் மட்டப் பண வீக்கமாகும்.

பண வீக்க வேகம் 14.2% வீதத்திலிருந்து 9.6% வீதம் வரை குறைவடைவதற்கு முக்கியமான இரண்டு காரணிகள் ஏதுவாயிருந்தன.

(i) மத்திய வங்கியால் கடைப்பிடிக்கப்பட்ட தீவிர கேள்விக் கட்டுப்பாட்டுக் கொள்கை

(ii) நிரம்பல் நிலையில் ஏற்பட்ட வளர்ச்சி

நிரம்பல் நிலையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பிரதானமாக வேளாண்மைத் துறையின் உள்நாட்டு உற்பத்திகள் ஓரளவு நன் நிலைமைக்கு உள்ளாகியமையும் ரூபாவின் பெறுமதி குறைந்த மட்டத்தில் வீழ்ச்சியடைந்தமையும் அத்தோடு இறக்குமதி நுகர்வுப் பண்டங்களின் விலை சர்வதேச சந்தையில் வீழ்ச்சியுற்றமையுமே காரணமாயிருந்தது.

2002ஆம் ஆண்டில் பண வீக்க வேகம் வீழ்ச்சியுற்றமையை அனைத்து விலைச் சுட்டெண்–களின் ஊடாகவும் காணக்கூடியதாயிருந்தது. (14வது புள்ளிவிபரக் குறிப்பைப் பார்க்கவும்) இந்த ஒவ்வொரு சுட்டெண்களையும் கணிப்பிடுவதற்கு அடிப்படை–யாகக் கொள்ளப்படுகின்ற தகவல்கள் தொடர்பான மூலங்கள், அடிப்படை ஆண்டு, புவியியல் பிரதேசம், வருமானத் தொகுதி, மாதிரி அளவு, நுகர்வு விடயங்களின் எண்ணிக்கை மற்றும் விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை ஆகியனவாகும். இவ் விடயங்களை உள்ளடக்கியதான அட்டவணை 1 கீழே தரப்பட்டுள்ளது.

*1வது அட்டவணை*

**இலங்கையின் மாதாந்த நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் மீதான தகவல் தொகுப்பு**

| சுட்டெண் | அடிப்படைத் தகவலின் மூலம் | அடிப்படைக் காலம் | புவியியல் பிரதேசம் | வருமானத் தொகுதி | மாதிரி எண்ணிக்கை | நுகர்வு அளவுகளின் எண்ணிக்கை | விலைச் சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொ.நு.வி.சு. | தொமபுதி. குடும்ப வரவு செலவு அளவீடு 1949/1950 | 1952 | கொழும்பு மாநகர சபை | மாதாந்த வருமானம் ரூ.55 – ரூ.485 | 455 | 187 | 7 |
| பா.கொ.நு.வி.சு. | தொமபுதி. தொழிற் படை மற்றும் சமூக பொருளாதார அளவீடு | சன. 1989 யூன் 1989 | பா. கொழும்புப் பகுதி | 40% குறைவானவை (செலவு) | 419 | 217 | 15 |
| கொமா.நு.வி.சு. | இமஎ. நு. நிதிசமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக். 1996 செப். 1997 | கொழும்பு மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 383 செகு. | 187 | 11 |
| அநுராதபுரம நு.வி.சு. | இமஎ. நு. நிதிசமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக். 1996 செப். 1997 | அநுராதபுரம் மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 172 செகு. | 162 | 06 |
| மாத்தளை நு.வி.சு. | இமஎ. நுநிதி சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக். 1996 செப். 1997 | மாத்தளை மாவட்டம் | 40% குறைவானவை செலவு) | 119 செகு. | 142 | 08 |
| மாத்தறை நு.வி.சு. | இமஎ. நு. நிதி. சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக். 1996 செப். 1997 | மாத்தறை மாவட்டம் | 40% குறைவானவை (செலவு) | 178 செகு. | 176 | 06 |
| மேல் மாகாண நு.வி.சு. | இமஎ. நுநிதி. சமூக பொருளாதார அளவீடு 1996/1997 | ஒக். 1996 செப். 1997 | மேல் மாகாணம் | 65% குறைவானவை (செலவு) | 1,932 செகு. | 217 | 15 |
| இ.நு.வி.சு. (கிழக்கு மாகாணம் உட்பட) | தொம்புவிதி. வரவு செலவு அளவீடு | 1995 1997 1996/1997 | வடக்கு, கிழக்கு தவிர முழு நாடும் | 80% குறைவானவை (செலவு) | 16,081 செகு. | 174 | 34 |

**பண வீக்கத்தை அளவிடுகின்ற புதிய விலைச் சுட்டெண் - இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்**

பணவீக்கம் (Inflation) என்பது பணத்தின் கொள்வனவுச் சக்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பொது விலை மட்டத்தின் அதிகரிப்பாகுமென்பதோடு,

*14வது புள்ளிவிபரக் குறிப்பு*

**ஆண்டுச் சராசரி விலை மாற்றங்கள் (%)**

| ஆண்டு | கொ.நு. வி.சு. | பா.கொ நு.வி.சு. | கொமா. நு.வி.சு. | மொ.வி. வி.சு. | மொ.தே. உ.சு. | மொ.உ. உ.சு. |
|---|---|---|---|---|---|---|
| 1980 | 26.6 | - | - | 33.7 | 18.2 | 18.1 |
| 1981 | 18.0 | - | - | 17.0 | 20.6 | 20.6 |
| 1982 | 10.8 | - | - | 5.5 | 10.2 | 9.9 |
| 1983 | 14.0 | - | - | 25.0 | 14.7 | 14.6 |
| 1984 | 16.6 | - | - | 25.6 | 17.4 | 17.1 |
| 1985 | 1.5 | - | - | -15.2 | 0.8 | 0.9 |
| 1986 | 8.0 | - | - | -2.9 | 5.5 | 5.8 |
| 1987 | 7.7 | - | - | 13.4 | 6.8 | 6.7 |
| 1988 | 14.0 | - | - | 17.8 | 11.5 | 11.5 |
| 1989 | 11.6 | - | - | 9.0 | 9.7 | 9.6 |
| 1990 | 21.5 | 24.6 | - | 22.2 | 20.0 | 20.0 |
| 1991 | 12.2 | 11.5 | - | 9.2 | 11.2 | 11.0 |
| 1992 | 11.4 | 9.4 | - | 8.8 | 10.0 | 10.0 |
| 1993 | 11.7 | 8.4 | - | 7.6 | 9.5 | 9.5 |
| 1994 | 8.4 | 4.8 | - | 5.0 | 9.4 | 9.3 |
| 1995 | 7.7 | 3.9 | - | 8.8 | 8.4 | 8.4 |
| 1996 | 15.9 | 14.7 | - | 20.5 | 12.2 | 12.1 |
| 1997 | 9.6 | 7.1 | 7.4 | 6.9 | 8.7 | 8.6 |
| 1998 | 9.4 | 6.9 | 7.3 | 6.1 | 8.4 | 8.4 |
| 1999 | 4.7 | 3.8 | 3.6 | -0.3 | 4.4 | 4.4 |
| 2000 | 6.2 | 3.2 | 3.6 | 1.7 | 6.7 | 6.7 |
| 2001 | 14.2 | 11.0 | 10.3 | 11.7 | 12.4 | 12.4 |
| 2002 | 9.6 | 10.6 | 6.8 | 10.7 | 8.3 | 8.3 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

இது வருடாந்தம் விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்திக் கணிப்பிடப்படுகின்ற பண வீக்க வேகத்தின் (Rate of Inflation) மூலமே அளவிடப்படுகின்றது. பணவீக்கமானது பொருளா–தாரத்தின் பல்வேறு துறைகளிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது, பொருளாதாரத்தின் உண்மைத் துறையில், அரச நிதியியல் தொழிற்பாடுகளில், வெளிநாட்டுத் துறையில், நுகர்வில், முதலீட்டில், வேதனத்தில், தொழில் நிலையில், வருமானப் பரம்பலில், வட்டி வீதங்களில், சேமிப்பில் இது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதன்படி பணவீக்கத்தைத் தவறுகளற்ற விதத்தில் கணிப்பிடுதல் அவசியமாகின்றது. இதற்காக இலங்கையில் தற்போது அமுலிலுள்ள விலைச் சுட்டெண்களுக்கு மேலதிகமாக பண வீக்கத்தை உரிய விதத்தில் அளவிடுகின்ற, மிகவும் அர்த்தபுஷ்டியுள்ள விலைச் சுட்டெண்ணாக முழு இலங்கையையும் உள்ளடக்கியதான "இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்" மேம்படுத்தப்–பட்டுள்ளது. (இதன் பொருட்டு, 2002 ஏப்ரில் மாதக் குறிப்பேட்டில் வின்சன் மர்வின் பர்னாந்து எழுதியுள்ள நடைமுறை இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் என்ற கட்டுரையைப் பார்க்கவும்). புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் ஏனைய விலைச் சுட்டெண்களோடு சுருக்கமாக ஒப்பிடப்படுகின்ற அதேநேரம் புதிய விலைச் சுட்டெண்ணின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

- புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்–ணானது முழுப் பொருளாதாரத்தினதும் நுகர்வு விலையில் ஏற்படும் பண வீக்கத்தை அளப்–பதற்கான யதார்த்தபூர்வமானதும், காலத்துக்–கேற்றதுமான அளவீடொன்றை வழங்குகின்றது. இது நற்போதுள்ள ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்களை விடச் சிறந்ததொரு உள்ளடக்–கத்தை வழங்குவதோடன்றி அவற்றின் பண வீக்க அளவீடுகளுடனும் பொருந்துவதாயுள்ளது.
- மாற்றமுறுகின்ற நுகர்வு முறையைப் பிரதி–நிதித்துவப்படுத்துவதிலிருந்து விலகிச் செல்கின்றபோதுகூட பயன்படுத்தப்பட்ட கடந்த கால நுகர்வோர் விலைச் சுட்டெண்களைப் போலன்றி, ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு தடவை நிறையேற்றல்களைப் புதுப்பிப்–பதற்காகவுள்ள நீண்டகாலத் திட்டமிடலின் கீழ், இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது நீண்டகாலம் அர்த்தபுஷ்டியுடன் நிலைத்திருக்கும்.
- தற்போதுள்ள நுகர்வோர் விலைச் சுட்டெண்–களிலுள்ள பலவீனங்கள் மிகவும் நன்றாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள நிலைமையின் கீழ் புதிய இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் மக்களால் மிக விரைவில் வரவேற்கப்படக்கூடிய பண்புகளைக் கொண்டதாயுள்ளது.
- கொள்கை வகுப்போராலும் பொது மக்களாலும் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் வரவேற்கப்படுவதற்கான பீட்சார்த்த காலம் (ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடம் வரை) முடிவடைந்ததன் பின்னர் ஏனைய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் வெளியிடப்படுவதிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.
- கடந்த காலங்களில் புதிய விலைச் சுட்டெண்கள் மக்கள் வரவேற்பைப் பெறாமை தொடர்பான நிராகரிப்பு அனுபவத்தின் கீழ் (உதாரணமாக, 1989 பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்) குடும்பங்கள், தொழில் முயற்சிகள்,

தொழில் அமைப்புக்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை வரவேற்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து-கொள்ளுதல் முக்கியமானதாயுள்ளது.

**வேதனச் சுட்டெண்கள**

பண்டங்கள் சந்தையில் விலை எவ்வளவு தூரத்-துக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளதோ அதேபோன்று காரணிச் சந்தையின் முக்கிய-மானதொரு துணைச் சந்தையான உழைப்புச் சந்தையில் வேதனம் முக்கியத்துவம் வாய்ந்த-தாயுள்ளது. இதனை நாணய வேதனம் (Money Wages) மற்றும் உண்மை வேதனம் (Real Wages) என இரண்டு வகையாக ஆராயலாம். **நாணய வேதனம்** என்பது பண ரீதியாகக் கைக்குக் கிடைக்கின்ற வேதனமாகும். **உண்மை வேதனம்** என்பது நாணய வேதனத்தின் கொள்வனவுச் சக்தியாகும். உண்மை வேதனம் பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$\text{உண்மை வேதனம்} = \frac{\text{நாணய வேதனம்}}{\text{கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்}} \times 100$$

இலங்கையில் வேதனங்கள் தொடர்பான மாற்றங்கள் இரண்டு பிரதானமான பிரிவுகளின் கீழ் வருகின்றன. அதாவது, அரச துறை மற்றும் தனியார் துறை என்றவாறாகும். தனியார் துறை மீண்டும், முறைசார் தனியார் துறை, முறைசாரா தனியார் துறை என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. 2002 ஆம் ஆண்டில் உண்மை வேதனத்தினுள் அரச துறை முறையே 5% - 6% க்கு இடையில் அதிகரித்ததோடு தனியார் துறை 2% - 6% க்கு இடையில் குறைவடைந்தது.

## 4. இலங்கையின் சர்வதேச வர்த்தகம்

2002ஆம் ஆண்டில் இலங்கையின் "வெளிநாட்டுத் துறையின்" குறிப்பிடத்தக்க பண்புகளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

- வெளிநாட்டு வர்த்தகம் ஓரளவு நன் நிலைக்-குள்ளாகியமை
- சென்மதி நிலுவையின் மொத்த மீதியில் மேலதிக அதிகரிப்பைக் காட்டியமை
- அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமை
- செலாவணி வீதம் மிகவும் நிலையானதொரு மட்டத்தை அடைந்தமை

**வெளிநாட்டு வர்த்தகம்**

வெளிநாட்டு வர்த்தகமானது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கியதாயுள்ளது. 2002 ஆம் ஆண்டில் ஏற்றுமதியின் அளவு 2% ஆல் அதிகரித்தது. ஆயினும் ஏற்றுமதி விலை 4.3% ஆல் வீழ்ச்சியடைந்தது. இதன்படி ஏற்றுமதி வருமானம் 2001 ஆம் ஆண்டின் அமெரிக்க டொலர் 4,817 மில்லியனோடு ஒப்பிடப்படுகின்றபோது 2002 ஆம் ஆண்டில் டொலர் 4699 மில்லியன் வரை 2.4% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியைப் பிரதானமான நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 2002 ஆம் ஆண்டில் இந்த நான்கு பிரிவுகளினதும் ஒப்பீட்டு முக்கியத்து-வத்தை பின்வருமாறு காட்டலாம்.

* கமத்தொழில் ஏற்றுமதிகள் 20%
* கைத்தொழில் ஏற்றுமதிகள் 77%
* வணிக ரீதியிலான ஏற்றுமதிகள் 3%
* வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள் 0%

கடந்த இருபத்தைந்து வருடங்களினுள் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை வேது வரைபடக் குறிப்பு சுட்டிக் காட்டுகின்றது.


இதன்படி, இலங்கையின் பிரதானமான வர்த்தகப் பிரிவு, 77% வீதப் பங்களிப்பை வழங்குகின்ற கைத்தொழில் ஏற்றுமதியாகும் (Industrial Exports). இதில் 51% வீதம் புடவைகளும் ஆடைகளுமாகும். ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிடையே இயந்திரங்களும் உபகரணங்-களும், வைரம் மற்றும் நகைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு பானங்கள், புகையிலை போன்றவை முக்கியமான இடத்தை வகிக்கின்றன. 1977 இல் சுதந்திர சந்தைப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இலங்கையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவு விரிவடையத் தொடங்கின. இதன் பெறுபேறாக 1986 ஆகின்றபோது கமத்தொழில் ஏற்றுமதித் துறையைத் தாண்டிச் சென்று பிரதானமான ஏற்றுமதித் துறையாக கைத்தொழில் ஏற்றுமதித் துறை மாறியது. 1977 ஆம் ஆண்டில் 14% வீதமாக இருந்த கைத்தொழில் ஏற்றுமதி 2002 இல் 77% வீத அதிகூடிய வீதமொன்றைக் காட்டியதோடு கடந்த தசாப்தத்தினுள் இதன் பங்களிப்பு 75% வீத மட்டத்தில் இருந்தது. இக் கால-கட்டத்தினுள் புடவைகள் மற்றும் ஆடைகளின் ஒப்பீட்டு முக்கியத்துவம் கைத்தொழில் ஏற்றுமதியினுள் 67%-68% வரை இருந்தது. எஞ்சிய நூற்று-வீதங்கள் ஒருசில கைத்தொழில் துறைகளுக்குப் பகிர்ந்து சென்றன. எவ்வாறாயினும், மொத்தக் கைத்தொழில் ஏற்று-மதிகளில் 2/3 வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் பல உள்ளன.

- கைத்தொழில் நாடுகளில் (அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்) நிலவுகின்ற குறைந்த கேள்வி.
- உப சகாரா வலயத்தில் உரு-வாகி வருகின்ற ஆடை உற்பத்தியாளர்களால் (அமெரிக்கா-வின் தீர்வை வரிச் சட்டத்தின் கீழ் அமெரிக்காவினுள் நுழை-வதற்கு அனுமதி பெற்றுள்ள) விடுக்கப்படுகின்ற போட்டி நிலை. அவர்களுக்கு இலாப-கரமான உழைப்பு கிடைப்பதால் இச் சவால் கடுமை-யானதாக உள்ளது.
- இலங்கை ஆடை ஏற்றுமதி செய்கின்ற அளவை விட தங்கியிருக்கும் அளவு அதிகமாயுள்ளதால் (மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 50% வீதம்) 2005 ஆம் ஆண்டாகின்றபோது படிப்படியாக பல்இழைய உடன்படிக்கையிலிருந்து (Multi Fiber Agreement) நீக்கப்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய பாதகமான நிலை.
- இலங்கையின் ஆடைகள் சந்தை அமெரிக்கா-வுக்கும் (64%) ஐரோப்பிய நாடுகளுக்கும் (30%) மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதால் அந் நாடுகளின் பொருளாதார அதிர்ச்சி நிலை இலங்கையின் ஆடைகள் சந்தையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துதல்.

இலங்கையின் ஆடைகள் ஏற்றுமதியில் 90% வீதமானவை முதலீட்டுச் சபை (BOI) நிறு-வனங்களின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைக்கின்றது. இலங்கையின் கைத்தொழில் ஏற்றுமதிகள் 2002 ஆம்

*வேது வரைபடக் குறிப்பு*

**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**



ஆண்டில் 2% வீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது 2001 ஆம் ஆண்டில் 13.4% வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

கமத்தொழில் ஏற்றுமதிகள் 2002 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதிகளில் 20% வீதமாயிருந்தன. 1991 ஆம் ஆண்டில் இலங்கையின் கமத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதியில் 31% வீதமாயிருந்ததோடு, அதன் ஒப்பீட்டு முக்கியத்துவம் கடந்த தசாப்தத்தினுள் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றது. கமத்தொழில் ஏற்றுமதிகளில் 70% வீதம் தேயிலை ஏற்றுமதியாகும். கடந்த தசாப்தத்தினுள் சிறு கமத்தொழில் ஏற்றுமதிகளில், குறிப்பாக கறுவா, பதப்படுத்தப்படாத புகையிலை, மிளகு, கிராம்பு, மரக்கறி, பழங்கள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி ஏற்பட்டதோடு, இதன் ஒப்பீட்டு முக்கியத்துவம் இறப்பர் மற்றும் தெங்கு ஏற்றுமதிகளின் முக்கியத்துவத்தைத் தாண்டிச் சென்றுள்ளது.

இறக்குமதிக் கட்டமைப்பை பிரதானமான நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் காட்டலாம்.

- நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதி, உதாரணமாக: அரிசி, சீனி, கோதுமை
- இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதி, உதாரணமாக: பெற்றோலியம், புடவைகள், உரம், இரசாயனப் பொருட்கள்
- முதலீட்டுப் பொருட்கள், உதாரணமாக: இயந்திரங்களும் உபகரணங்களும், போக்குவரத்துக் கருவிகள், கட்டடவாக்கப் பொருட்கள்
- வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்.

2002ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியின் ஒப்பீட்டு முக்கியத்துவம் 22% வீதமாயிருந்ததோடு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியும் முறையே 57% வீதமாகவும் 19% வீதமாகவும் இருந்தது.

1977 இல் சுதந்திர சந்தைப் பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து நோக்குகின்றபோது கடந்த 25 வருட காலத்தினுள் இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பானது நுகர்வுப் பொருட்கள் இறக்குமதியிலிருந்து இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை நோக்கி நகர்ந்துள்ளது. இதற்கான பிரதானமான காரணம் யாதெனில், அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் நிரம்பல் அதிகரித்தமையாகும். மறுபுறம், கைத்தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிக் கேள்வியை அதிகரிப்பதற்கு ஏதுவாயிருந்ததோடு, உட்கட்டமைப்பு வசதிகள், கட்டடவாக்கம் மற்றும் தொழில் நுட்பத் துறைகளின் வளர்ச்சி ஆகியன முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பதற்குக் காரணமாயமைந்தது. 2002 இல் இலங்கையின் இறக்குமதிகளின் உள்ளமைப்பு 15வது புள்ளிவிபரக் குறிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**வர்த்தகத்தின் போக்கு**

2002இல் இலங்கையின் சர்வதேச வர்த்தகத்தின் வர்த்தகப் போக்கினுள் (Trade Direction) ஒருசில குறிப்பிடத்தக்க பண்புகளைக் காணக்கூடியதாயுள்ளது.

- கைத்தொழில் நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான பிரதானமான சந்தைகளாக மாறி 74% வீத சந்தைப் பங்களிப்பைக் காட்டியமை.

*15 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு**

| பொருட்கள் | மொத்த இறக்குமதியில் % |
|---|---|
| A **நுகர்வுப் பொருட்கள்** | 20% |
| • உணவு பான வகைகள் (அரிசி, சீனி,மாவு, பால் உற்பத்திகள்) | 11% |
| • ஏனைய நுகர்வுப் பொருட்கள் (மோட்டார் வாகனம், மோட்டார் சைக்கிள், வானொலி, தொலைக் காட்சி) | 9% |
| B **இடைநிலைப் பொருட்கள்** | 57% |
| • பெற்றோலியம் | 13% |
| • புடவைகள் | 22% |
| • ஏனையவை (உரம், இரசாயனப் பொருட்கள், நிற வகைகள், கோதுமை விதை) | 22% |
| C **முதலீட்டுப் பொருட்கள்** | 19% |
| • கட்டடவாக்கப் பொருட்கள் | (4%) |
| • போக்குவரத்துக் கருவிகள் | (2%) |
| • இயந்திரங்களும் உபகரணங்களும் | (10%) |
| • ஏனையவை | (3%) |
| D **வகைப்படுத்தப்படாதவை** | 4% |
| **மொத்த இறக்குமதிகள்** (A+B+C+D) | 100 |

- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தைக்கான பங்களிப்பு 22% வீதமாயிருந்தமை.
- கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையின் பங்களிப்பு 4% வீதமாயிருந்தமை.
- இலங்கைக்குக் கூடுதலாகப் பொருட்களை இறக்குமதி செய்த நாடுகளிடையே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பங்களிப்பு 70% வீதமாயிருந்ததோடு, கைத்தொழில் நாடுகளின் பங்களிப்பு 30% வீதமாயிருந்தமை.
- சார்க் நாடுகள் மொத்த ஏற்றுமதியில் 5% வீதப் பங்களிப்பையும், இறக்குமதியில் 15% வீதப் பங்களிப்பையும் வழங்கியமை.
- 1979 இல் இருந்து இலங்கையின் பிரதானமான பாரிய கொள்வனவாளராக 38% வீதப் பங்களிப்புடன் அமெரிக்கா விளங்கியமையும், இதில் 80% வீதம் புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியாய் இருந்தமையும்.
- பிராந்திய இரு தரப்பு மற்றும் பல்தரப்பு வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை.

## 5. இலங்கையின் சென்மதி நிலுவையும் (Balance of Payment in Sri Lanka) வெளிநாட்டு நிதியியல் எண்ணக்கருவும்

இலங்கையின் சென்மதி நிலுவையில் ஒட்டுமொத்தமாக அமெரிக்க டொலர் 338 மில்லியன் மிகையொன்று அறிக்கையிடப்பட்டது. இது, வர்த்தக நிலுவையின் அமெரிக்க டொலர் 1,406 மில்லியன் பற்றாக்குறை, பணிகள் கணக்கின் (தேறிய) 275 மில்லியன் மிகை, வருமானக் கணக்கின் (தேறிய) 252 மில்லியன் பற்றாக்குறை, தனியார் மாற்றல்கள் மற்றும் அலுவல்சார் மாற்றல்கள் கணக்குகளின் (தேறிய) முறையே அமெரிக்க டொலர் 1,097 மில்லியன் மற்றும் 26 மில்லியன் மிகை, மூலதன மற்றும் நிதியியல் கணக்கின் 506 மில்லியன் மிகை ஆகிய நிலுவைகளின் ஒருங்கிணைந்த பெறுபேறாகும். (16வது புள்ளிவிபரக் குறிப்பு) இந்த

*16 வது புள்ளிவிபரக் குறிப்பு*

**இலங்கையின் சென்மதி நிலுவை 2002**

| தலைப்பு | பெறுமதி (அமெரிக்க டொலர் மில்லியன்) |
|---|---|
| **A. பொருட்கள் கணக்கு** | |
| 1. ஏற்றுமதி | 4,609 |
| 2. இறக்குமதி | (6,106) |
| 3. சந்தை நிலுவை | (1,406) |
| **B. பணிகள் கணக்கு** | |
| 4. பெறுகைகள் | 1,268 |
| 5. கொடுப்பனவுகள் | (997) |
| 6. பணிகள் கணக்கின் தேறிய நிலுவை (4-5) | +271 |
| **C. வருமானக் கணக்கு** | |
| 7. பெறுகைகள் | 75 |
| 8. கொடுப்பனவுகள் | 327 |
| 9. வருமானக் கணக்கின் தேறிய நிலுவை (7-8) | (252) |
| **D. பொருட்கள், பணிகள், வருமானம் (தேறிய) (A+B+C)** | (1,387) |
| **E. நடைமுறை மாற்றல்கள் கணக்கு** | |
| 10. தனியார் மாற்றல்கள் (தேறிய) | 1,097 |
| 11. அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 26 |
| 12. நடைமுறை மாற்றல்கள் நிலுவை (10-11) | 1,071 |
| **F. நடைமுறைக் கணக்கின் நிலுவை (D+12)** | (264) |
| **G. மூலதன மற்றும் நிதியியல் கணக்கு** | 566 |
| **மூலதனக் கணக்கு** | 55 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 451 |
| **நிதியியல் கணக்கு** | |
| (வெளிநாட்டு நேரடி முதலீடுகள் | |
| தனியார்மயமாக்கல் பெறுகைகள் | |
| தனியார் நீண்டகாலக் கடன்கள் (தேறிய) | |
| அரச நீண்டகாலக் கடன்கள் (தேறிய) | |
| குறுகியகாலக் கடன்கள் (தேறிய) | |
| **H. பிழைகளும் தவறுகளும்** | 3 |
| **I. மொத்த நிலுவை (F+G+H)** | +338 |
| **J. நாணய மாற்றம்** | -338 |

ஒவ்வொரு கணக்குகளுக்குமுரிய விடயங்களைச் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

**சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கு**

சென்மதி நிலுவை ஆவணத்தில் பொருட்கள் கணக்குக்கு உரியதாயுள்ள ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் தொடர்பாக மேலே கலந்துரையாடப்பட்டது. சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கில் 6 துறைகள் உள்ளடங்குகின்றன.

* போக்குவரத்து
* சுற்றுலா
* தொலைத்தொடர்பு
* காப்புறுதிச் சேவை
* ஏனைய வியாபாரப் பணிகள்
* வேறு எதிலும் குறிப்பிடப்படாத அரச செலவுகள்

**சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு**

வருமானக் கணக்கில் முக்கியமாக, ஊழியர் கொடுப்பனவுகள், நேரடி முதலீடுகள், வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்குகின்றன. இதில் ஊழியர் கொடுப்பனவுகளின் கீழ் ஊழியர்களுக்கான வேதனங்கள் மற்றும் மதியுரைக் கட்டணங்கள் உள்ளடங்குகின்றன. அதாவது, வெளிநாட்டுத் தூதரகங்களின், சர்வதேச அமைப்புக்களின் பணிகள் மற்றும் பணியாளர்களுக்கான கொடுப்பனவுகளாகும்.

### நடைமுறை மாற்றல்கள்

இதில் பிரதானமாக நடைமுறை தனியார் மாற்றல்கள் மற்றும் நடைமுறை அலுவல்சார் மாற்றல்கள் ஆகிய இரண்டு விதமான மாற்றல்களும் உள்ளடங்குகின்றன. இங்கு, தனியார் மாற்றல்கள் என்பது, வெளிநாட்டில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள் இந் நாட்டுக்கு அனுப்பி வைக்கின்ற வெளிநாட்டுப் பண அனுப்பல்களாகும்.

### சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு

பொருட்கள் கணக்கு, பணிகள் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் நடைமுறை மாற்றல்கள் கணக்குகளின் தேறிய நிலுவைகளின் கூட்டுத் தொகையை சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை எனக் குறிப்பிடுகிறோம். நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையானது, மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளின் நேர்கணிய நிலுவையிலிருந்தே நிவர்த்தி செய்யப்படுகிறது.

### சென்மதி நிலுவையின் மூலதன மற்றும் நிதியியல் கணக்கு

இது பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றது. ஒன்று மூலதனக் கணக்காகும். இதில் மூலதன மாற்றல்கள் உள்ளடங்குகின்றன. அதாவது, அரசாங்கம் கருத்திட்டங்களுக்காகப் பெற்றுள்ள மாற்றல்களும், வெளிநாடுகளில் வசிப்பதற்குச் சென்றுள்ளவர்கள் (புலம் பெயர்ந்தோர்) காணி, சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற பெறுகைகளைப் போன்ற, அவர்கள் புதிதாக வசிப்பதற்குச் சென்றுள்ள நாடுகளில் செய்கின்ற மாற்றல்களும் உள்ளடங்குகின்றன.

### மூலதனக் கணக்கைத் தளர்த்துதல்

மூலதனக் கணக்கு தளர்த்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பது நீண்டகாலமாக விவாதத்துக்கு உள்ளாகியிருந்ததொரு விடயமாகும். எவ்வாறாயினும், இலங்கை ஏற்கனவே மூலதனக் கணக்கை ஓரளவு திறந்து விட்டுள்ளது. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் (NRFC) பேணி-வருவதற்கு வர்த்தக வங்கிகளுக்கு வாய்ப்பளித்-துள்ளமை, வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகளை (FCBUs) நிறுவுவதற்கு வாய்ப்பளித்துள்ளமை, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குப் பட்டியலிடப்-பட்டுள்ள கம்பனிகளால் (Quoted Companies) வெளியிடப்பட்டுள்ள பங்கு மூலதனத்தில் 40% தொடக்கம் 100% வீதம் வரை முதலீடு செய்வதற்கு அனுமதியளித்துள்ளமை, வெளிநாட்டு முதலீட்-டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்கின்றபோது விதிக்கப்பட்ட 100% வீத கையளிப்பு வரி இரத்துச் செய்யப்பட்டமை, பங்குச் சந்தையில் வெளிநாட்டு மூலதனத்தை இலகுபடுத்தும் பொருட்டு "பங்கு முதலீடு தொடர்பான வெளிவாரி ரூபாக் கணக்கை" (SIERA) பேணிவருவதற்கு அனுமதி அளித்துள்ளமை, வர்த்தக வங்கிகளுக்கு அவர்களது மூலதன மற்றும் ஒதுக்குப்பணப் பெறுமதியில் 15% வீதம் வரை வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு அனுமதியளித்துள்ளமை, இலங்கை அபிவிருத்தி முறிகளை (டொலர் முறிகள்) வெளியிட்டமை, நேரடி வெளிநாட்டு முதலீட்டுக் கட்டுப்பாடுகளை குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் முழுமையாகவே நீக்கியமை, போன்றவற்றை மூலதனத் தளர்வுச் செயற்பாடுகளாகச் சுட்டிக்-காட்டலாம். ஆயினும், இன்னமுமே தனியார் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளுதல், வதிவுடையோர் வெளிநாடுகளில் முதலீடு செய்தல், தனியார் துறையால் வெளியிடப்படுகின்ற கம்பனித் தொகுதிக் கடன்களிலும், முறிகளிலும் வதிவற்றோர் முதலீடு செய்தல் ஆகியன கட்டுப்படுத்தப்-பட்டுள்ளன.

மூலதனக் கணக்கு முழுமையாகவே திறந்து விடப்படுதலானது உள்நாட்டு நிதியியல் துறையின் அபிவிருத்தியின் பொருட்டு சந்தையை ஊக்கு-விப்பதற்கும், ஒழுக்கமான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கும், மூலதனம் சுதந்திரமாக நாடுகளுக்கிடையே பரிமாற்றப்படுவதற்கும், மேலதிக சேமிப்புக்களை ஏனைய நாடுகளில் முதலீடு செய்வதற்கும், அல்லது பற்றாக்குறைச் சேமிப்பை நிதியிடுவதற்கும் உதவுவதாயிருக்கும்.

ஆயினும், மூலதனக் கணக்கை முழுமை-யாகவே திறந்து விடுவதற்கு எதிர்பார்க்கின்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் (இலங்கையைப் போன்ற) அதனைத் திறந்து விடுவதற்கு முன்னர் பேரண்டப் பொருளாதார நிலைப்பாட்டை ஏற்படுத்துதலும், போட்டி ரீதி-யிலானதும், வினைத் திறனுடன்கூடியதுமான நிதியியல் முறைமையொன்றை ஏற்படுத்துதலும் இரண்டு பூர்வாங்கத் தேவைகளாகுமென்பதைச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

### சென்மதி நிலுவையின் மொத்த நிலுவையும் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளும்

இலங்கையின் சென்மதி நிலுவையின் இறுதி நிலுவை மொத்த நிலுவையாகும். வேறு விதத்தில் கூறுவதென்றால், வெளிநாட்டுக் கணக்குகளின் சீராக்கத்தின் பொருட்டு தேறிய அலுவல்சார் ஒதுக்குகளின் மாற்றமுறும் அளவுகளின் மூலம் காட்டப்படுவது மொத்த நிலுவையாகும். மொத்த நிலுவையில் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது இத் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைகின்றன. மொத்த நிலுவையில் மிகையொன்று ஏற்படுமிடத்து இத் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிக்-கின்றன.

அரசாங்கத்திற்கும் (அரச முகவராண்மைகள் உட்பட) மத்திய வங்கிக்கும் உரித்தாகவுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களின் தேறிய பெறுமதியே தேறிய அலுவல்சார் ஒதுக்குகளாகக் குறிப்பிடப்-படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் பாரதூரமான விதத்தில் தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன. 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் அலுவல்சார் ஒதுக்குகள் வளர்ச்சியடைந்தன. 2002 ஆம் ஆண்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் பெறுமதி அமெரிக்க டொலர் 1,700 மில்லியனாயிருந்தது. தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியுறுவதன் மூலம் பொருளாதார எதிர் விளைவுகள் பல உருவாகின்றன. நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதி மீது நம்பிக்கை குறைவடைதல், நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி மீது நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்படல், வெளிநாட்டுக் கடன்களைப் பெறவேண்டி நேரிடுதல், நாணயத்தின் வெளிவாரிப் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்ய வேண்டி நேரிடுதல், ஏற்றுமதியாளர்கள் தாம் உழைத்த வருவாயை நாட்டிற்குள் கொண்டு-வருவதைத் தாமதித்தல், இறக்குமதிக் கொடுப்-பனவுகள் துரிதப்படுத்தப்படுவதன் காரணமாக குறுகியகால மூலதனப் பாய்ச்சல் அதிகரித்தல், அநேகமாக நிதியியல் பிரச்சினையை நோக்கிச் செல்லவேண்டி வருதல் ஆகியன அலுவல்சார் ஒதுக்குகள் குறைவடைவதன் பொருளாதார எதிர் விளைவுகளாகும். எவ்வாறாயினும் 2002 ஆம் ஆண்டில் அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமைக்குப் பல காரணிகள் ஏதுவாயமைந்தன.

- அரசியல் நிலைப்பாடு
- சமாதானச் செயற் திட்டம்
- அண்மிய கடன் வசதிகளின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன் பெறுதல்
- ரூபா சுதந்திரமாக மிதக்கவிடப்படல்
- உள்நாட்டு நாணயச் சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கி குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தல்
- ஐக்கிய அமெரிக்க டொலரை அடிப்படையாகக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வெளியிடப்படுதல்
- தனியார் பண அனுப்பல்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்தல்

ஒரு நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் முக்கியத்துவத்தை அளவிடுகின்ற அளவுகோல் யாதெனில், அச் சொத்துக்களின் மூலம் கொள்வனவு செய்யக்கூடிய இறக்குமதி மாதங்களாகும். இதனை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதிச் சாத்தியம் எனவும் குறிப்பிடுகிறோம். 2002 இல் இலங்கையில் இருந்த மொத்த அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்களின் தொகை 2003 இல் 3.3 மாத இறக்குமதிக்கு நிதியிடக்கூடிய அளவுக்குப் போதுமானதாயிருந்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் + வர்த்தக வங்கிகளுக்கு உரியதாயுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள்) 4.9 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்கே போதுமானதாயிருந்தது.

### வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம்

வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம் என்பது, வெளிநாட்டுக் கடன் தவணைத் தொகைகளையும் அதற்குரிய வட்டியையும் அதாவது, வெளிநாட்டுக் கடன் பணிகளை வெளிநாட்டு வருவாய்களின் நூற்று வீதமாகக் காட்டுதலாகும். இங்கு வெளிநாட்டு வருவாய்கள் என்பதில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி வருவாயைப் போன்றே பொருட்கள், பணிகள் வருமானம் மற்றும் தனியார் மாற்றல்களின் மூலமான வருவாயையும் சேர்த்துக் கொள்ளலாம். பொருட்கள், பணிகள் வருவாய்களின் நூற்று வீதமாக நோக்கப்படுகின்றபோது, 2002 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன் பணிகள் வீதம் 13.2% வீதமாயிருந்ததோடு, பொருட்கள் பணிகள் வருமானம் மற்றும் தனியார் மாற்றல்கள் வருவாயின் நூற்று வீதமாக நோக்கப்படுகின்றபோது 10% வீதமாகும். மொத்தக் கடன் தொகையில் மிகக் கூடுதலான அளவு சலுகை அடிப்படையிலான நிபந்தனைகளின் கீழ் பெறப்பட்டுள்ளதால், இன்றுள்ள கடன் பணிகள் பிரச்சினையாயிராத போதிலும், சலுகை ரீதியிலல்லாத கடன் அதிகரிக்கக்கூடிய போக்கானது பிரதானமான இரண்டு தேவைகளை மேலெழுப்-புகின்றது. ஒன்று, முன்னெச்சரிக்கைக் கடன் கொள்கையின் தேவையாகும். மற்றையது, வினைத் திறனுடன்கூடியதான வளப் பகிர்வின் தேவையாகும்.

### வெளிநாட்டுச் செலாவணி வீதம்

உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி-யானது வெளிநாட்டுச் செலாவணி வீதமாகப் பொருள்கொள்ளப்படுகிறது. 2002 ஆம் ஆண்டினுள் இலங்கை ரூபாவானது பிரதானமான நாணய வகைகளின் எதிரே வீழ்ச்சியடைந்தது.

## 6. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் (Economic Development) கொள்கையும்

பொருளாதார அபிவிருத்தி என்பது, பொருளாதார வளர்ச்சியைத் (Economic Growth) தொடர்ந்து ஒரு நாட்டின் ஒட்டுமொத்தமான சமூக அமைப்பும் உயர் நிலையை அடைவதாகும். அதாவது, வறுமை குறைவடைதல், தொழிலின்மை குறைவடைதல், வருமானப் பரம்பலின் முரண்பாடுகள் குறைவடைதல், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் அதிகரித்தல் ஆகியன இவற்றில் முக்கியமானவையாயுள்ளன. இவை பல்வேறு சுட்டெண்களின் மூலம் அளவிடப்படுகின்றன. இச்சுட்டெண்களின் கீழ் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### இலங்கையின் குடித்தொகை

2002ஆம் ஆண்டின் நடுவாண்டுக் குடித்தொகை 19 மில்லியனாயிருந்தது. இது, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகின்றபோது 1.5% வளர்ச்சியாகும். வருடாந்தக் குடித்தொகையானது, குடித்தொகையின் இயற்கை வளர்ச்சியினதும் (செப்பமற்ற பிறப்பு மற்றும் இறப்பு வீதங்களுக்கு இடையிலான வித்தியாசம்) தேறிய புலம் பெயர்வுகளினதும் (குடிவரவுகுடியகல்வு) தரவுகளைப் பயன்படுத்தி எதிர்வுகூறப்படுவதன் மூலமே மதிப்பிடப்படுகின்றது.

குடித்தொகையின் வயது ரீதியிலான உள்ளமைப்பு

| | |
|---|---|
| 0 - 14 வயதுக்கு இடைப்பட்டோர் | 25% |
| 15 - 64 வயதுக்கு இடைப்பட்டோர் | 65% |
| 65 வயதுக்கு மேற்பட்டோர் | 10% |
| மொத்தம் | 100 |

### தொழிற்படை

தொழிற்படை (Labour Force) என்பது, குறிப்பிட்டதொரு காலகட்டத்தினுள் 10 வயதுடையோரும் அதற்கு மேற்பட்டவர்களுமான தொழில் புரியக்கூடிய அல்லது தொழில் புரிவதற்கு எதிர்பார்க்கின்ற நபர்களின் ஒப்பீட்டளவாகும். இது 2002 ஆம் ஆண்டில் 7.05 மில்லியனாயிருந்தது. முன்னைய ஆண்டில் இது 6.73 மில்லியனாயிருந்தது. இதன்படி தொழிற்படை 320,000 ஆல் அதிகரித்துள்ளது. பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஆக்கமுறையான எதிர்பார்ப்புகளே இதற்கான காரணமாகும். 2002ஆம் ஆண்டில் இலங்கையின் தொழிற்படையின் ஒப்பீட்டளவான வீதம் (தொழிற்படையானது 10 வயதுக்கு மேற்பட்ட குடும்பக் குடித்தொகையின் வீதமாகக் காட்டப்படுகின்ற) 49.4 வீதமாகும்.

### தொழில் நிலை

2002ஆம் ஆண்டில் தொழில் நிலை வீதம் 90.2% வீதமாயிருந்ததோடு, இதனைத் துறைவாரியாகப் பின்வருமாறு காட்டலாம்.

| | |
|---|---|
| வேளாண்மைத் துறையின் தொழில் நிலை | 33% |
| கைத்தொழில் துறையின் தொழில் நிலை | 21% |
| பணிகள் துறையின் நிலை | 46% |

தொழில் நிலை மூலங்களின்படி தொழில்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

| | |
|---|---|
| அரச துறை | 13% |
| தனியார் துறை | 46% |
| தொழிலதிபர்கள் | 2% |
| சுயதொழில் புரிவோர் | 29% |
| கொடுப்பனவு பெறாத குடும்ப ஊழியர் | 10% |
| மொத்தம் | 100 |

### தொழிலின்மை

2002ஆம் ஆண்டில் தொழிலின்மை தொழிற்படையின் 9.1% வீதமாகும். தொழிலின்மையின் ஒருசில பிரதானமான பண்புகள் வருமாறு:

15 - 18 வயதுக்கு இடைப்பட்டோரிடையே தொழிலின்மை 31% வீதமாவதோடு 20 - 29 க்கு இடைப்பட்ட வயதினரிடையே தொழிலின்மை 21% வீதமாகும். இவ்வாறான அதிகூடிய நூற்று வீதமொன்றைக் கொண்டிருப்பதனால் இது இளைஞர்களுடைய தொழிலின்மையாயுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்தோர்களிடையே தொழிலின்மை 13% வீதமாயிருப்பதனாலும் க.பொ.த. உயர் தரம் மற்றும் அதை விடக் கூடுதலான தகுதியைக் கொண்டோர்களிடையே தொழிலின்மை வீதம் 17% வீதமாயிருப்பதனாலும் நாட்டில் கற்றோர்களிடையே தொழிலின்மை நிலவுதல்.

| அபிவிருத்திச் சுட்டெண் | பெறுபேறு |
|---|---|
| * செப்பமற்ற பிறப்பு வீதம் (2002) குடித்தொகையில் 1,000 க்கு | 19.1 |
| * செப்பமற்ற இறப்பு வீதம் (2002) குடித்தொகையில் 1,000 க்கு | 5.8 |
| * சிசு மரண வீதம் (2002) குடித்தொகையில் 1,000 க்கு | 12.2 |
| * தங்கியிருப்போர் வீதம் (%) | 57.8 |
| * வாழ்நாள் எதிர்பார்ப்பு | |
| ஆண் | 70.7 |
| பெண் | 75.4 |
| * கல்வி அறிவு வீதம் | 90.1 |
| * வருமானப் பங்கீடு கினிகுணகம் | 0.463 |
| * வறுமை | |
| * நாளொன்றுக்கு 1 டொலருக்கும் கீழுள்ள குடித்தொகை (1995) | 6.6% |
| நாளொன்றுக்கு 2 டொலருக்கும் கீழுள்ள குடித்தொகை (1995) | 45.4% |
| போசாக்கு - நாளாந்தம் உட்கொள்ளும் கலோரி அளவு (1996/97) | 2,337 |
| * தொழிலின்மை வீதம் (2002) தொழிற்படையில் (%) | 9.1 |
| * மனித அபிவிருத்திச் சுட்டெண் (2000) (178 நாடுகளிடையே இலங்கையின் நிலை : 89) | 0.741 |

## ஏனைய முக்கிய சமூகக் குறிகாட்டிகள்

| | அலகு | 2002 |
|---|---|---|
| 1. போக்குவரத்து | | |
| தேசிய வீதிகளின் நீளம் (ஏ மற்றும் பீ) | கி.மீ. | 11,547 |
| புகையிரதப் பாதைகளின் நீளம் | கி.மீ. | 1,447 |
| 2. நீர் வழங்கலும் சுகாதாரமும் | | |
| பாதுகாப்பான குடிநீரைப் பெறுவோர் | | 70% |
| குழாய்வழி நீரைப் பெறுவோர் | | 35% |
| 3. மின்வலு | | |
| மின்வலுவைப் பெறும் குடியிருப்பாளர் | சதவீதம் | 62.3 |
| தலைக்குரிய மின்வலுப்பாவனை | கி.வா.ம/ஆள் | 297 |
| 4. தொடர்பூட்டல் | | |
| தொலைபேசி அடர்த்தி நிலையான இணைப்பு-100 | ஆட்களுக்கு தொலைபேசி | 4.7 |
| | கையடக்கத் தொலைபேசி உட்பட-100 ஆட்களுக்குத் தொலைபேசி | 9.5 |
| இணையத்தளம் மின் அஞ்சல் | ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு | 3.7 |
| அஞ்சல் அலுவலகத்தினால் பணியாற்றப்படும் சராசரி குடித்தொகை | எண்ணிக்கை | 4,102 |
| 5. நலம் | | |
| வைத்தியசாலை படுக்கைகள் (அ) | ஒவ்வொரு 1,000 ஆட்களுக்கு | 3.6 |
| வைத்தியர்கள் (அ) | ஒரு மருத்துவருக்கு ஆட்கள் | 2,300 |
| தாதிகள் (அ) | ஒவ்வொரு 10,000 ஆட்களுக்கு | 12.1 |
| நலம் மீதான செலவு | மொ.உ.உ. வீதமாக | 1.51 |
| 6. பொதுக் கல்வி | | |
| பள்ளிக்கூட அடர்த்தி (பள்ளிக்கூடம் உள்ளடக்கும் பிரதேசம்) | ச.கி.மீ | 6.2 |
| அரச பள்ளிக்கூடங்களில் மாணவர்/ஆசிரியர் விகிதம் | எண்ணிக்கை | 21 |
| இடாப்பில் சேர்ந்த வயது குறிப்பிட்ட வீதம் (வயது 5-19) | சதவீதம் | 64.62 |
| 7. பல்கலைக்கழகக் கல்வி | | |
| மாணவர் ஆசிரியர் விகிதம் | எண்ணிக்கை | 14.2 |
| வயது அடிப்படையில் அனுமதி பெற்ற விகிதம் (வயது 20-24) | சதவீதம் | 2.4 |
| க.பொ.த உயர் தரத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றோர் சதவீதம் | | 50.65 |
| அனுமதி - தகைமையில் சதவீதமாக | சதவீதம் | 13.25 |
| கல்வி மீதான செலவு | மொ.உ.உ. இன் வீதமாக | 2.28 |
| 8. வங்கித் தொழில் | | |
| வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை | எண்ணிக்கை | 23 |
| உள்நாட்டு வங்கிகள் | எண்ணிக்கை | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | எண்ணிக்கை | 12 |
| தன்னியக்க கூற்றுப்பொறி | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 3.3 |
| வழங்கப்பட்ட கொடுகடன் அட்டை | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 1,690 |
| வங்கித் தொழில் அடர்த்தி-வங்கிகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு 100,000 ஆட்களுக்கு | 6.1 |

## முக்கிய பொருளாதார வழிமுறைகள் - 2002

நடைமுறைக்கு வந்தநாள் — கொள்கை வழிமுறைகள்

### நாணயக் கொள்கை

2002 மார்ச் 20 – மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே ஆண்டொன்றுக்கு 11.50 சதவீதத்திற்கும் 13.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2002 மார்ச் 21 – மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 10 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டொன்றுக்கு 13.60 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது

2002 மார்ச் 22 – மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 5 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டொன்றுக்கு 13.65 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2002 ஏப்பி 04 – மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 20 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டொன்றுக்கு 13.85 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2002 யூன் 04 – மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 10 அடிப்படைப் புள்ளிகளினால் ஆண்டொன்றுக்கு 13.75 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

2002 யூன் 25 – மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்களுக்கான கழிவு (நேரடி விற்பனைகள்) வீதத்திற்கிடையிலும் முதனிலைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்திற்கிடையிலும் இலாப எல்லை 5 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 15 அடிப்படைப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டன.

2002 யூலை 11 – மத்திய வங்கியின் இரண்டாம் நிலைச் சந்தையில் திறைசேரி உண்டியல்களுக்கான கழிவு (நேரடி விற்பனைகள்) வீதத்திற்கிடையிலும் முதனிலைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்திற்கிடையிலும் இலாப எல்லை 15 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 50 அடிப்படைப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டன.

2002 யூலை 26 – மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் ஒவ்வொன்றும் 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே ஆண்டொன்றுக்கு 10.50 சதவீதத்திற்கும் 12.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2002 யூலை 29 – உண்டியல்களுக்கான கழிவு (நேரடி விற்பனைகள்) வீதத்திற்கிடையிலும் முதனிலைச் சந்தை நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்திற்கிடையிலும் இலாப எல்லை 50 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 125 அடிப்படைப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டன.

2002 நவெம் 22 – மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் 75 அடிப்படைப் புள்ளிகளாலும் 100 அடிப்படைப் புள்ளிகளாலும் முறையே ஆண்டொன்றுக்கு 9.75 சதவீதத்திற்கும் 11.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டன.

2002 திசெம் 17 – 2002ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நாணய விதி (திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது.

– நாணய விதிச் சட்டத்துக்கான திருத்தத்துடன் நியதி ஒதுக்கு விகிதத்தின் மீதான நியதி வரையறைகள் அகற்றப்பட்டன.

### நிதியியல் துறை

2002 பெப். 01 – மேற்பார்வை வகைச் சட்டத்தினை வலுப்படுத்துவதற்காகவும் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்களாக மாறுவதை அனுமதிப்பதற்காகவும் முதனிலை வணிகர் முறையை விரிவுபடுத்துவதற்காகவும் 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்ட (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளும் 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதியப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்ட (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளும் வெளியிடப்பட்டன.

2002 மார்ச் 01 – வர்த்தக வங்கிகளில் நாளாந்த வெளிநாட்டு நாணய தேறிய திறந்த நிலை எல்லை உயர்த்தப்பட்டது. வர்த்தக வங்கிகளின் ஆகக்கூடிய நேர்க்கணிய திறந்த வெளிநாட்டுச் செலாவணி நிலைமை வங்கிகளின் மூலதன நிதிகள் மற்றும் ஒதுக்குகள் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டன.

2002 மார்ச் 25 – அரசாங்கம், மத்திய வங்கி, வங்கித்தொழில் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட நிதியியல் துறை சீர்திருத்தக் குழு உருவாக்கப்பட்டது.

2002 ஏப்ரில் 01 – இலங்கை தன்னியக்கத் தீர்வகம் வர்த்தக வங்கிகளினால் முகாமைப்படுத்தப்படும் புதிய வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனி ஒன்றுக்கு (வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர்) மத்திய வங்கியினால் உரிமை மாற்றப்பட்டது.

2002 மே 02 – முதனிலை வணிகர்களுக்கான மூலதனப் போதுமை விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டது. (3 சதவீதம்)

2002 யூலை 02 – திறைசேரி முறிகளின் ஏலங்களில் வழங்கப்பட்ட தொகையின் ஆகக் குறைந்தது 15 சதவீதத்துக்கான விலைக் குறிப்பீட்டுத் தேவைப்பாடு முதனிலை வணிகர்களின் மீது விதிக்கப்பட்டது.

2002 ஒகஸ்ட் 05 – நியதி திரவச் சொத்து விகிதத்தினைக் கணிப்பீடு செய்யும் போது இலங்கை அபிவிருத்தி முறிகளில் வர்த்தக வங்கிகள் மேற்கொண்டுள்ள முதலீடுகளின் நாளாந்த சந்தைப் பெறுமதியைத் திரவச் சொத்தாகக் கருதிக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

2002 செப். 13 – மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு நிதிக் கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2002 திசெ. 24 – வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் தொழிற்பாடுகளுக்கு இதுவரை காலமும் பிரயோகிக்கப்பட்ட முன்மதியுடைய பிரமாணங்கள் கரை கடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கும் பிரயோகிக்கப்படக் கூடியதாக ஆக்கப்பட்டன.

### வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கை

2002 சனவரி 01 – பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிக்கான முழுமையான தீர்வை விலக்கல் (2002 சனவரி 01 இலிருந்து 2002 நவெம்பர் 07 வரை)

2002 சனவரி 21 – அரிசி இறக்குமதி உரிமத் தேவைப்பாடு அகற்றப்பட்டதுடன் 35 சதவீத இறக்குமதித் தீர்வைக்குப் பதிலாக அரிசியின் மீது கிலோகிறாம் ஒன்றுக்கு ரூபா 7.00 கொண்ட குறித்துரைக்கப்பட்ட தீர்வையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

– அரிசி மற்றும் நெல் மீதான இறக்குமதித் தீர்வையின் மீது 40 சதவீத மிகைக் கட்டணம் அகற்றப்பட்டது.

| நடைமுறைக்கு வந்தநாள் | | கொள்கை வழிமுறைகள் |
|---|---|---|
| **நாணயக் கொள்கை** | | |
| 2002 மார்ச் 01 | – | இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் தீர்வை ஏற்பாடுகள் செயற்பாட்டுக்கு வந்தன. |
| 2002 மார்ச் 22 | – | ஆகக் குறைந்தது ரூபா 100 இற்கு உட்பட்ட இறக்குமதி உரிமங்களின் மீது 0.1 சதவீதக் கட்டணமொன்று விதிக்கப்பட்டது. |
| | – | ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களின் மீது ரூபா 100 கொண்ட தீர்வை விதிக்கப்பட்டது. |
| | – | சின்ன வெங்காயம் (கிலோகிறாம் ஒன்று ரூபா 5.00) பெரிய வெங்காயம் (கிலோ கிறாம் ஒன்று ரூபா 6.00) உருளைக் கிழங்கு மற்றும் மிளகாய் (கிலோகிறாம் ஒன்று ரூபா 30.00) என்பவற்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தீர்வைகள் விதிக்கப்பட்டன. சோளம் தீர்வையற்றிருந்தது. |
| 2002 ஏப்ரில் 01 | – | சோயா எண்ணெய், பாம் எண்ணெய், சூரிய காந்திப்பூ எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் மீது கிலோகிறாம் ஒன்றுக்கான குறித்துரைக்கப்பட்ட ரூபா 20 மிகைக் கட்டணம் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூபா 5இற்குக் குறைக்கப்பட்டது. |
| | – | துணிகளின் இறக்குமதி பொருட்கள் சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 15 | – | இறக்குமதித் தீர்வை மீதான 40 சதவீத மிகைக் கட்டணம் 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| 2002 மே 03 | – | தீர்வை ஆலோசனைக் குழு நிறுவப்பட்டது. |
| 2002 செப். 26 | – | சோயா எண்ணெய், பாம் எண்ணெய், சூரிய காந்திப்பூ எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் மீது கிலோகிறாம் ஒன்றுக்கான குறித்துரைக்கப்பட்ட ரூபா 5 மிகைக் கட்டணம் புறக்கீடு செய்யப்பட்டது. |
| | – | சிவப்பு மைசூர் பருப்பு மற்றும் மஞ்சள் பருப்பு என்பன 20 சதவீத இறக்குமதித் தீர்வை மிகைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | – | நெத்தலிக் கருவாடு, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் இறால் கருவாடு என்பன தீர்வையற்றதாக்கப்பட்டன. |
| 2002 ஒக். 01 | – | கோழிப்பண்ணைத் துறைக்கு ஏற்றுமதித் தீர்வைத் தள்ளுபடி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. (எந்த ஒரு நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படும் முதல் ஆறு மில்லியன் கிலோ கிறாம்களுக்கு கிலோ கிறாம் ஒன்றுக்கு ரூபா 20 கொண்ட உதவிக்கொடுப்பனவு.) |
| 2002 நவெ. 06 | – | மசகெண்ணெய், கோதுமை மா, மருந்தாக்கற் பொருட்கள் மற்றும் புத்தகங்கள் நீங்கலாக இதுவரை சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்டிருந்த விடயங்கள் மீது 2 மற்றும் 10 சதவீதங்களுக்கிடையிலான தீர்வை வீதங்கள் விதிக்கப்பட்டன. |
| | – | அரிசியின் மீதான குறித்துரைக்கப்பட்ட தீர்வை கிலோகிறாம் ஒன்றுக்கு ரூபா 5 இற்குக் குறைக்கப்பட்டது. |
| | – | பாசிப்பயறு, தட்டைப்பயறு, துவரம் பருப்பு, அரிசி மா மற்றும் கருப்பட்டி மீது கிலோ கிறாம் ஒன்றுக்கு ரூபா 5 குறித்துரைக்கப்பட்ட தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2002 நவெ. 18 | – | கழிவு மற்றும் துண்டுச் செம்பு, நிக்கல், அலுமினியம், காரீயம், துத்தநாகம், தகரம் டங்ஸ்டன் போன்றவை ஏற்றுமதி உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. |
| **இறைத் துறை** | | |
| 2002 பெப். 01 | – | பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் மீதான 35 சதவீத பெறுமான விகித வரி பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 24 மற்றும் டீசல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 4 என்ற குறித்துரைக்கப்பட்ட தீர்வைகளினால் மாற்றீடு செய்யப்பட்டது. |
| 2002 பெப். 14 | – | தெரிந்தெடுக்கப்பட்ட சிகரட் வகைகளுக்கான உற்பத்தித் தீர்வை வீதங்கள் திருத்தப்பட்டன. (60 மில்லி மீற்றர் நீளத்துக்குக் குறைவானவற்றுக்கு வரி குறைக்கப்பட்டதுடன் 72 – 84 மில்லி மீற்றர் நீளமானவற்றுக்கு வரி அதிகரிக்கப்பட்டன.) |
| 2002 பெப். 22 | – | கோதுமை, கோதுமை மா மற்றும் பாண் மீதான தேசிய பாதுகாப்புத் தீர்வை அகற்றப்பட்டது. வரையறுக்கப்பபட்ட பிரிமா சிலோன் நிறுவனத்துக்கு கோதுமை மா மீதான் உதவிக் கொடுப்பனவு புறக்கீடு செய்யப்பட்டது. |
| 2002 மார்ச் 22 | – | உற்பத்தித் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் பியர் (10%) மற்றும் வெறியக் குடி வகை (30%) மீதான தீர்வை அகற்றப்பட்டு மதுசாரம் மீதான அனைத்து உற்பத்தி வரிகளும் உற்பத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்காக உற்பத்தித் தீர்வை வீதங்கள் மேல் நோக்கித் திருத்தப்பட்டன. |
| | – | உற்பத்தித் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் காற்றடைத்த பானங்கள் மீது ஒன்றுக்கு ரூபா 4 உற்பத்தித் தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 01 | – | வட்டி வருவாயின் மீது 10 சதவீத தடுத்துவைக்கும் வரி விதிக்கப்பட்டது. (ஆண்டொன்றுக்கு வரியற்ற மட்டம் ரூபா 72,000 ஆகும்) |
| | – | தனிப்பட்ட வருமானவரி விலக்களிப்பு அடிமட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 240,000 த்திற்கு அதிகரிக்கப்பட்டதோடு வரிப் பிரிவுகள் பின்வருமாறு மாற்றப்பட்டன.<br>முதல் ரூபா 180,000 – 10%<br>இரண்டாவது ரூபா 180,000 – 20%<br>எஞ்சியது – 35% |
| | – | வரி அறவிடத்தக்க ஆண்டு வருமானம் ரூபா 5 மில்லியனை விஞ்சாதவிடத்து கூட்டு வருமான வரி வீதம் 20 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டது. |
| | – | கூட்டு வரியின் மீதான 20 சதவீத மிகைக் கட்டணம் நீக்கப்பட்டது. |
| | – | கம்பனி வரி முன் அறவீடு நீக்கப்பட்டது. |
| | – | மூலதன இலாபங்கள் மீதான வரி நீக்கப்பட்டது. |
| | | 2002 மார்ச் 31 வரை தனது வருமானத்தை வெளிபடுத்தாத ஆட்களுக்காக 2002ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரி மன்னிப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 10 | – | திறைசேரி உண்டியல்களின் ஊடான அரச கடன்பாடுகளுக்குப் பிரயோகிக்கப்பட்ட நிமதிச் சட்ட வரையறைகள் ரூபா 250 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 29 | – | வெளிநாட்டில் தொழில் புரிபவர்களுக்கான தீர்வையற்ற சலுகை ஐ. அமெரிக்க டொலர் 1250 இலிருந்து ஐ. அமெரிக்க டொலர் 1500 க்கு அதிகரிக்கப்பட்டது. |

| நடைமுறைக்கு வந்தநாள் | கொள்கை வழிமுறைகள் |
|---|---|
| **நாணயக் கொள்கை** | |
| 2002 ஏப்ரில் 30 | – மத்திய அரசாங்கத்தின் கீழ் விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை நீக்கப்பட்டது. |
| 2002 மே 01 | – ஏற்றுமதிச் செயல்முறைக் கைத்தொழில்களுக்கான இறக்குமதிகளுக்கு 0.75 சதவீத சலுகை வீதமொன்றுடன் அனைத்து இறக்குமதிகளுக்கும் 1 சதவீத துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தித் தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2002 மே 23 | – வருவாய் முகாமைத்துவ ஆலோசனைக் குழு நிறுவப்பட்டது. |
| 2002 யூன் 01 | – 2002ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பற்றுக்கள் வரிச் சட்டத்தின் கீழ் அனைத்து பற்று கொடுக்கல் வாங்கல்கள், வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் பயணிகள் காசோலைகளைப் பணமாக மாற்றுவதனால் பெறப்படும் பெறுகைகள் என்பவற்றின் மீது 0.1 சதவீத பற்றுக்கள் வரி அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 ஒகஸ்ட் 01 | – பொருட்கள், சேவைகள் வரியும் தேசிய பாதுகாப்புத் தீர்வையும் நீக்கப்பட்டு பெறுமதி கூட்டிய வரியாக ஒருங்கிணைக்கப்பட்டது. |
| | – சிகரட்டுக்கள், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பவற்றின் மீதான உற்பத்தித் தீர்வைகள் திருத்தப்பட்டன. |
| 2002 ஒக். 10 | – யூரியாவுக்கான வளமாக்கி உதவிக் கொடுப்பனவுத் திட்டம் நிலையான விலை உதவிக் கொடுப்பனவுத் திட்டத்திலிருந்து (50 கிலோ கிறாம்களுக்கு ரூபா 350) நிலையான செலவு உதவிக் கொடுப்பனவு முறைக்கு (மெற்றிக் தொன் ஒன்றுக்கு ரூபா 6,000) திருத்தப்பட்டது. |
| 2002 ஒக். 12 | – 1995ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட டீசல் வரி நீக்கப்பட்டது. |
| 2002 ஒக். 18 | – சிகரட்டுக்கள் மீதான உற்பத்தித் தீர்வை திருத்தப்பட்டது. |
| 2002 ஒக். 22 | – 2002ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டம் இயற்றப்பட்டது. |
| 2002 திசெ. 17 | – அரசிறை முகாமைத்துவ மதியுரைக் குழு, வருவாய் செலவினக் குழு மீளமைக்கப்பட்டது. |
| **ஏனைய கொள்கைகள்** | |
| 2002 சன. 15 | – தன்னியக்க பெற்றோலிய விலைச் சீராக்கச் சூத்திரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 மார்ச் 06 | – 1999ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க விவசாய மற்றும் கமநலக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கைக்கான புதிய காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 மார்ச் 20 | – தன்னியக்க பெற்றோலிய விலைச் சீராக்க சூத்திரத்தில் டீசல் மீதான கடன் மீட்புக் கட்டணம் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 3.50 இல் இருந்து லீற்றர் ஒன்றுக்கு ரூபா 2.50 இற்கு குறைக்கப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 01 | – முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளினால் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு ஆடைக்கும் ரூபா 25 சீரான கட்டணமொன்று விதிக்கப்பட்டது. |
| 2002 ஏப்ரில் 15 | – சராசரி 37 சதவீதத்தில் மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. |
| 2002 மே 01 | – தொலைத் தொடர்பூட்டல் கட்டணங்கள் சராசரி 15 சதவீதத்தால் உயர்த்தப்பட்டன. |
| 2002 மே 04 | – மாதிரி அடிப்படையில் இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 யூன் 01 | – 12.5 சதவீதத்திலிருந்து 87.5 சதவீதம் வரையிலான வீச்சில் தண்ணீர் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. |
| 2002 யூலை 01 | – சூத்திரம் ஒன்றுக்கு இணங்க பெரும்பாலும் ஆண்டுதோறும் பேருந்துக் கட்டணங்களைத் திருத்துவதற்கு பாதை பயணிகள் போக்குவரத்துக்கான பேருந்துக் கட்டணக் கொள்கை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2002 யூலை 15 | – தன்னியக்க பெற்றோலிய விலைச் சீராக்க சூத்திரத்தில் கடன் மீட்பு மூலகம் (பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 6.00, டீசல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 2.50) புறக்கீடு செய்யப்பட்டது. |
| 2002 ஒகஸ்ட் 06 | – 1942ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டது. |
| 2002 ஒக். 01 | – அரச துறைக்கான ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டது. |
| | – அரச துறையில் ஏற்கனவே உள்ள பதவி வெற்றிடங்கள் நீக்கப்பட்டன. |
| 2002 ஒக். 22 | – கிராமிய கைத்தொழில் புனருத்தாரண நிதியம் நிறுவப்பட்டது. |
| 2002 நவெ. 07 | – விதை மற்றும் பயிர்ச் செய்கைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையின் கீழ் விவசாய உற்பத்திப் பொருட்களின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தலுக்காக புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் கொடுகடன் உச்சவரம்பு ரூபா 2.7 மில்லியனிலிருந்து ரூபா 5 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2002 திசெ. 11 | – பாராளுமன்றத்தில் முதலீட்டுச் சபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. |
| | – 2002ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க மின் வலு சீர்திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. |
| 2002 திசெ. 17 | – 2002ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப்பட்டது. |
| 2002 திசெ. 18 | – 2002ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க சிவில் விமானப் போக்கு வரத்து அதிகார சபைச் சட்டம் இயற்றப்பட்டது. |
| 2002 திசெ. 20 | – 2002ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுச் சட்டம் இயற்றப்பட்டது. |

## முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள்

| | 1990 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|---|
| **1. குடித்தொகை** | | | | | | |
| நடுவாண்டுக் குடித்தொகை ('000ஆட்கள்) (ஆ) | 16,267 | 17,935 | 18,208 | 18,467 | 18,732 | 19,007 |
| நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சி வீதம் (சதவீதம்) (ஆ) | 1.1 | 1.3 | 1.5 | 1.4 | 1.4 | 1.5 |
| குடித்தொகை அடர்த்தி (ச.கி.. மீற்றருக்கு ஆட்கள்) (ஆ) | 259 | 286 | 290 | 295 | 299 | 304 |
| தொழிற்படை ('000 ஆட்கள்) | 6,001 | 6,660 | 6,673 | 6,827 | 6,773 | 7,050(இ) |
| தொழிற்படை பங்களிப்பு வீதம் (சதவீதம்) | 51.9 | 51.7 | 50.7 | 50.3 | 48.8 | 49.4(இ) |
| தொழிலற்றோர் வீதம் (தொழிற்படையில் சதவீதம்) | 15.9 | 9.2 | 8.9 | 7.6 | 7.9 | 9.1(இ) |
| **2. வெளியீடு** | | | | | | |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ.(ரூ.பில்லியன்) | 322 | 1,018 | 1,106 | 1258 | 1,407 | 1,585 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.தே.உ.(ரூ.பில்லியன்) | 319 | 1,002 | 1,090 | 1.233 | 1,382 | 1,560 |
| சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ.(ரூ)(ஆ) | 18.934 | 56,760 | 60.741 | 68.102 | 75.133 | 83.382 |
| சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.உ.(ரூ)(ஆ) | 18,791 | 55,863 | 59.882 | 66.790 | 73,795 | 82,076 |
| சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.உ.உ.(ஐ.அ.டொ.)(ஆ) | 473 | 879 | 863 | 899 | 841 | 872 |
| சந்தை விலைகளில் தலைக்குரிய மொ.தே.உ. (ஐ.அ.டொ.)(ஆ) | 469 | 865 | 851 | 881 | 826 | 858 |
| **3. உண்மை வெளியீடு** (மாற்றங்கள் சதவீதத்தில்) | | | | | | |
| மொ. தே. உற்பத்தி | 6.2 | 4.6 | 3.8 | 5.8 | -1.3 | 4.1 |
| மொ. உ. உற்பத்தி | 6.4 | 4.7 | 4.3 | 6.0 | -1.5 | 4.0 |
| மொ. உ. உ. துறைவாரியான பகுப்பாய்வு (ஈ) | | | | | | |
| வேளாண்மை | 8.5 | 2.5 | 4.5 | 1.8 | -3.4 | 2.5 |
| கைத்தொழில் | 7.8 | 5.9 | 4.8 | 7.5 | -2.1 | 1.0 |
| பணிகள் | 4.2 | 5. | 1 4.0 | 7.0 | -0.5 | 6.0 |
| **4. கூட்டுக் கேள்வியும் சேமிப்புகளும்** (மொ.உ.உ.யின் சதவீதம்) | | | | | | |
| நுகர்வு | 85.3 | 80.9 | 80.5 | 82.6 | 84.3 | 85.4 |
| தனியார் | 75.9 | 71.3 | 71.5 | 72.1 | 74.3 | 76.4 |
| அரசு | 9.4 | 9.8 | 9.0 | 10.5 | 10.3 | 8.8 |
| முதலீடு | 22.2 | 25.1 | 27.3 | 28.0 | 22.0 | 21.3 |
| அரசு | 4.2 | 3.3 | 3.2 | 3.3 | 3.0 | 2.0 |
| அரச கூட்டுத்தாபனங்கள் | 4.2 | 3.1 | 3.5 | 3.3 | 2.8 | 2.6 |
| தனியார் | 14.8 | 18.7 | 20.6 | 21.5 | 16.2 | 16.7 |
| பொருட்கள், இறக்குமதி மற்றும் காரணியல்லாப் பணிகளினது தேறிய தாக்கம் | -10.0 | -6.1 | -7.8 | -10.6 | -6.2 | -6.7 |
| பொருட்கள், காரணியல்லாப் பணிகளினது ஏற்றுமதிகள் | 31.3 | 36.2 | 35.5 | 39.0 | 37.3 | 36.2 |
| பொருட்கள், காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகள் | 41.3 | 42.3 | 43.3 | 49.6 | 43.6 | 42.9 |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 14.3 | 19.1 | 19.5 | 17.4 | 15.8 | 14.6 |
| தேறிய காரணி வருமானம் (உ) | 2.5 | 4.3 | 4.0 | 4.1 | 4.5 | 5.1 |
| தேசிய சேமிப்பு | 16.8 | 23.4 | 23.5 | 21.5 | 20.3 | 19.7 |
| **5. விலைகளும் கூலிகளும்** (சதவீத மாற்றம்) | | | | | | |
| கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952=100) | 21.5 | 9.4 | 4.7 | 6.2 | 14.2 | 9.6 |
| பா.கொ. நுகர்வோர் விலைச் சுட்டெண் (சன-யூன் 1989=100) | 24.6 | 6.9 | 3.8 | 3.2 | 11.0 | 10.6 |
| இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண் (1995-1997=100) | - | - | 4.0 | 1.5 | 12.1 | 10.2 |
| மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974=100) | 22.2 | 6.1 | -0.3 | 1.7 | 11.7 | 10.7 |
| மொ. தே. உற்பத்திச் சுருக்கி | 20.0 | 8.4 | 4.4 | 6.7 | 12.4 | 8.3 |
| அனைத்து கூலி நிர்ணய சபைகளிலுமுள்ள தொழிலாளர்களுக்கான பெயரளவு கூ. வீ. சு. | 16.9 | 12.3 | 2.5 | 2.3 | 4.9 | 7.4 |
| மத்திய அரச ஊழியர்களுக்கான பெயரளவு கூலி வீதச் சுட்டெண் | 13.0 | 10.5 | - | 8.3 | 20.8 | 16.4 |
| **6. அரச நிதி** (மொ. உ. உற்பத்தியின் சதவீதம்) | | | | | | |
| அரசிறை | 21.1 | 17.2 | 17.7 | 16.8 | 16.7 | 16.5 |
| செலவினமும் தேறிய கடன் வழங்கலும் | 31.0 | 26.3 | 25.2 | 26.7 | 27.5 | 25.4 |
| நடைமுறைச் செலவு | 22.3 | 19.6 | 18.7 | 20.2 | 21.6 | 20.8 |
| அரச முதலீடுகள் | 8.3 | 6.7 | 6.5 | 6.4 | 5.9 | 4.6 |
| நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை(-)/மிகை(+) | -1.2 | -2.4 | -1.0 | -3.4 | -4.9 | -4.4 |
| ஆரம்பப் பற்றாக்குறை | -3.5 | -3.8 | -1.9 | -4.2 | -1.1 | -1.6 |
| திரண்ட பற்றாக்குறை | -9.9 | -9.2 | -7.5 | -9.9 | -10.8 | -8.9 |
| வரவு-செலவுப் பற்றாக்குறையை நிதியிடல் | 9.9 | 9.2 | 7.5 | 9.9 | 10.8 | 8.9 |
| வெளிநாடு | 5.7 | 1.7 | 0.7 | 0.4 | 1.4 | 0.6 |
| உள்நாடு | 4.2 | 7.0 | 6.8 | 9.4 | 8.8 | 8.0 |
| தனியார்மயப்படுத்தல். பெறுகைகள் | - | 0.4 | - | - | 0.6 | 0.4 |
| அரச படுகடன் | 96.5 | 90.8 | 95.1 | 96.9 | 103.2 | 105.3 |
| வெளிநாடு | 54.9 | 45.3 | 45.9 | 43.1 | 45.3 | 45.5 |
| உள்நாடு | 41.6 | 45.5 | 49.1 | 53.8 | 58.0 | 59.8 |

(அ) [illegible]
(ஆ) 1998ஆம் [illegible] 2001 [illegible]
(இ) [illegible] 2002
(ஈ) [illegible] "World Development Indicator" [illegible] (ப.நி.வகை.ப பிரிவு 10-45). பணிகள் (ப.நி.வகை.ப பிரிவு 50-99) [illegible]
(உ) வெளிநாட்டில் தொழில் புரிவோர் அனுப்பிய பண அனுப்பீடுகள் உட்பட

Printed at Atlanta Graphics, 62, 1st Floor, Super Market Complex, Borella, Colombo 8
Tel. : 2683750, 0777 758764